**பாதீடு 2013**

உயர்ந்தது அரச ஊழியர் சம்பளம் : மணித்தியாளத்திற்கு 7 ரூபா 50 சதம்.

ஓட்டப்பந்தயக் கார்களுக்கான வரி குறைப்பு.

ஐப்பசி மாதம் 26ம் திகதி November 11, 2012

மலைமுரசு® MALAIMURASU

அறைவு 01 இயம் 16

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# ஏமாற்றும் வெளிநாட்டவர்கள் – ஏமாறும் திருமலை மக்கள்

உல்லாசபுரியான இலங்கையை ஏமாற்றும் சொர்கமாக வெளிநாட்டவர்கள் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் செய்திகளும் நடந்தேறிய நிகழ்ச்சிகளும் தெரிவிக்கின்றன.

திருமலையில் சில நாட்களுக்கு முன் பணப்பரிமாற்ற நகைக்கடையொன்றில் பல்லாயிரக்கனக்கான ரூபாய்களுக்கு மோசடியான அமெரிக்க டொலர்கள் மாற்றப்பட்ட விபரம் வெளியாகியது.

தொடர்ந்து அதிர்ச்சி தரும் தகவலாக தற்போது தென் ஆபிரிக்காவிலிருந்து வருகைதந்த ஒருவர் திருமலையின் கடல்முக வீதியிலுள்ள நாளாந்த வாடகைக்கு விடப்படும் வீடொன்றின் தொலைபேசியினை பல லட்சம் (கொடி) ரூபாய்களுக்கு பாவித்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தகவலொன்று வெளியாகியுள்ளது. மூன்று நாட்கள் மட்டுமெ வாடகைக்கு இருந்த அவ் வெளி நாட்டவர் நிலையான இணைப்புத் தொலைபேசியின் பிளஸ் (Plus)

(10ம் பக்கம் பார்க்க)

Sri Lanka
A land like no other

# கோடிக்கணக்கான பணத்தைச் சுருட்டுமா நிதிக் கம்பனி ?

**சுமார் 06 கோடி ரூபா**

**வழங்கிய வட்டியை முதலீட்டில் கழிக்க முயற்சி....**

முதலிடப்பட்ட பணத்தைச் உடனடியாகத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் திருமலையில் கிளையினைக் கொண்டு இயங்கும் நிதிக்கம்பனியான "லங்கா பில்டிங் சொசைட்டி (தனியார்) கம்பனி" வங்குரோத்தாகியுள்ளதாக அக்கம்பனியில் பெருமளவு பணத்தை முதலீடு செய்திருந்த சுமார் இருபதுக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் மலைமுரசுக்கு அறியத் தந்துள்ளனர். பலவருடங்களாக திருஞான சம்பந்தர் வீதியில் கடல்முக வீதிச் சந்திக்கருகில் இயங்கிவரும் நிதிக் கம்பனியே இவ்வாரத்தில் தனது திருமலை முதலீட்டாளர்களில் சிலரை மட்டும் அழைத்து பணத்தைத் திருப்பிக் கொடுத்தல் தொடர்பான புதிய நிபந்தனைகளை விதித்துள்ளது.

செலிங்கோ குழுமத்தின் கீழ் "செலிங்கோ பில்டிங் சொசைட்டி (தனியார்) கம்பனி" எனப் பெயரிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கம்பனியானது 2009ல் அக் குழுமத்தின் கடனட்டைக் கம்பனியான "கோல்டன் கீ" நிறுவனத்தின் முறைகேடுகள் தொடர்பாக எழுந்த நிலைமைகளின் பின் நிதி நெருக்கடிக்குள் வீழ்ந்தது. அப்போது இக்கம்பனி நட்டமடைந்ததாகத் தெரிவித்து ஓர் கணக்கும் காட்டப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## "குறி இடல்"

### கவிதைப் புத்தக வெளியீடு

திருக்கோணமலை மாவட்டத்தின் இளம் கவிஞர்களில் ஒருவரான தில்லைநாதன் பவித்ரனின் இரண்டாவது கவிதைப் புத்தகமான "குறிஇடல்" கவிதைப் புத்தக வெளியீடு எதிர்வரும் 18. 11. 2012ன் காலை 9 மணி 20நிமிடத்திற்கு உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் கலையரங்கில் இடம்பெறவுள்ளது. அதற்கான அழைப்பிதழ்கள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விவேகானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் இப் புத்தக வெளியீடு நிகழவுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)


# கடலில் வீசப்பட்டார் நிலாவெளிப் பயணி

**75 நாட்களின் பின் தகவல்**

சட்டவிரோத குடியேற்றப் பயணத்தைத் தொடங்கிய 15ம் நாளே உணவு மற்றும் மருத்துவ வசதியின்மையால் மரணமான ஒருவர் கடலில் வீசப்பட்ட செய்தி சுமார் 75 நாட்களின் பின் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

நிலாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு சக்திவேல் என்பவருக்கே இப் பரிதாபகரமான நிலை எழுந்துள்ளதாக அவருடன் பயணித்த அவரது உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார். 07.11.2012 அன்றுடன் திருக்கோணமலையிலிருந்து புறப்பட்டு இரண்டு மாதங்களும் பதினைந்து நாட்களும் கடந்த நிலையில் இத் தகவலை அவ் உறவினர் இந்தோனேசியாவிலிருந்து தெரிவித் துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. 1960ம் ஆண்டு பிறந்த திரு. சக்திவேல் நிலாவெளி உல்லாச விடுதியின் பிரதம சமையலாளராகப் பல அண்டுகள் பணிபுரிந்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)



உயிர் ஊசலாடும் அவுஸ்திரேலியப் பயணம்

# தவறு நிரூபிக்கப்பட்டால் தண்டனை

## திருமலை வளாக முதல்வர்



கடந்த வாரம் திருமலை வாளகத்தில் இடம்பெற்ற மாணவர்களுக்கு இடையிலான முறுகல் நிலைமை தொடர்பாக விளக்கம் அளிக்கும் செய்தியாளர் சந்திப்பு வாளக முதல்வர் வைத்திய கலாநிதி வர்ணகுலேந்திரன் அவர்களால் கடந்த 7.11.2012 அன்று உப்புவெளியின் பல்கலைகழக விருந்தினர் விடுதியில் நடாத்தப்பட்டது. இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட வளாக முதல்வர் மாணவர்களுக் கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது உண்மைதான் ஆனால் இன ரீதியான

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

ஏமாற்றுபவர்கள் இருக்கும் மட்டும் ஏமாறும் செய்திகள் இருக்குமென்றே எண்ணத் தோன்றுகின்றது. இப்போதெல்லாம் ஏமாற்றுபவர்கள் ஒன்றும் அழுக்கடைந்த தலையுடனோ, அருவருக்கத்தக்க அங்க லாவன்யங்களுடனோ, பார்த்தாலே ஏமாற்றுபவன் எனத் தெரியும் எந்த வரையறைக்கும் பொருந்தாதவர்களா யிருப்பது தான் உலகமயமான பொருளாதாரத்தின் தாக்கமாகி விட்டது.

சுத்தமான உடை, நுனிநாக்கில் ஆங்கிலம், பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் எனும் நாமம், கழுத்தில் பட்டி, சப்பாத்து, வரி செலுத்துகின்றோம் என்னும் பதிவு, இன்னும் உங்களைக் கவரும் எவ்வெவ் வழிகள் உள்ளனவோ அவ்வவ் வழிகளில் எல்லாம் ஏமாற்றுபவர்கள் உள்நுழைந்து விட்டார்கள். இப்போது அவர்களையும் தாண்டி வெந்நிறத் தோல் கொண்ட வெளி நாட்டவர்களும் ஏமாற்றத் தொடங்கி விட்டார்கள்.

சரி, நாங்கள் சும்மாயிருக்க வந்தவர்கள் எம்மை ஏமாற்றுகின்றார்கள் என்று நீங்கள் வாய்ச் சவடால் விடவேண்டாம். அல்லது "முதலுக்கே மோசம் வந்துவிட்டதே" என்று அழுது அனுதாபத்தை உருவாக்கவும் வேண்டாம். எங்களது தவறான ஆசையே இதற்கெல்லாம் அடித்தளம் என்பதைப் புரிந்து கொள்ளுங்களேன்.

அதென்ன ஆசையில் தவறான ஆசை, சரியான ஆசை என்பது? மனிதப் படைப்பில் இயற்கையின் சக்தியால் உருவாக்கப்பட்ட அற்புதமான விடயங்களில் ஒன்றே ஆசை. "அனைத்திற்கும் ஆசைப்படு" பவனால் மட்டுமே ஆன்ம ஈடேற்றத்திற்கும் ஆசைப்பட முடியும். ஆனால் நாம் ஆசைப்படுபவற்றை அடைந்து கொள்வதன் வழிமுறையே அவ் ஆசை சரியானதா அல்லது தவறானதா என்பதைத் தீர்மானிக்கின்றது.

பெரும் பணமீட்டும் ஆசை எல்லோருக்கும் உண்டு. மிகப்பெரும் பணமீட்டிய பின் ஒருநாள் நிச்சயமாக அப்பணத்தின் மீதான ஆசை அகன்று போய் நிர்வாணமாய் நிற்கும் நாள் வரும். ஆனால் நாம் அப்பணத்தை ஈட்ட முயற்சிக்கும் வழிகளாலேயே நாம் ஏமாற்றப்பட்டும் விடுகின்றோம். உதாரணமாக 25வீத வட்டியைத் தருகின்றோம் என்றால் 5வது வருடத்தில் முதலை விட மீளப் பெற்றுக்கொண்ட வட்டித் தொகை அதிகரித்துவிடுவதை நாம் கணிப்பதில்லை. ஆகா...மிகப் பெரிய வருமானம் என்று முதலிட்ட பலர் இன்று திருமலையில் படும் பாட்டைப் பாருங்கள்.

அதே போல வலைப்பின்னல் வர்த்தகங்கள் ஊடாக நாங்கள் சும்மாயிருக்க காசு வரும் என்று பலர் கூட்டாகக் கிளம்பியுள்ளனர். அவர்களின் மதியீனத்தால் நீங்களும் அறிவற்றுப் போனால் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தானே செய்வார்கள்.

கடும் உழைப்பால் பணம் பெற முயற்சிக்கும் ஆசை நியயமாய் இருக்க காலாட்டிக்கொண்டே பணமுழைக்கும் ஆசை நியயமற்றதே. அந் நியாயமற்ற வழிகளில் நீங்கள் முயலும் போது உங்களை ஏமாற்ற மற்றோர் எத்தன் இருக்கத்தானே செய்வான்.

அறிவைக் குடைந்து ஆசையை அடையும் வழிகளை கண்டு அதன் வழி ஓயாத உழைப்பை ஈன்று அள்ளிச் செல்லும் செல்வம் அடைய முயற்சிப் போமா நண்பர்களே? -ஆசிரியர்-

## இறந்தவர்களுக்கான நினைவு நாள்



திருக்கோணமலையில் 02.10.2012 வெள்ளிக்கிழமை அன்று இறந்தவரிகளின் நினைவு அஞ்சலி திருக்கோணமலையில் காணப்படுகின்ற கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்களால் சிறப்பிக்கப்பட்டது. கத்தோலிக்கர்கள் தமது இறந்த ஆன்மாக்களின் நினைவு அஞ்சலியினை தமது கத்தோலிக்க சேமக்காலையினுள் திருப்பலியின் மூலம் சிறப்பித்தனர். பிற்பகல் 5.00 மணியளவில் மேதகு . ஆயர். கலாநிதி. கிங்சிலி சுவாமிபிள்ளை மற்றும் அருட் தந்தையார்களால் இத் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. அதனைப் போன்று கிறிஸ்தவர்கள் தமது அஞ்சலியினை மக்கேசர் மைதானத்திற்கு முன் காணப்படுகின்ற சேமக்காலையில் அஞ்சலி திருப்பலியினை சிறப்பித்தனர்.

## பத்தொன்பது பாடசாலைகளுக்கு ஆய்வு கூடங்கள்

மஹிந்த உதய வேலைத் திட்டத்தின் கீழ் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்திற்கு அமைவாக திருக்கோணமலை மாவட்டத்தில் பத்தொன்பது பாடசாலைகளுக்கான தொழிநுட்ப ஆய்வு கூடங்களை அமைப்பதற்கான வேலைத்திட்டம் தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் திருமலைக் கிளையினால் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாக திருக்கோ ணமலை மாவட்ட ஒப்பந்தக்காரர் சங்க செயலாளர் திரு. ச.ஜெகதீசன் மலை முரசுக்கு தெரிவித்தார்.

இவ் வேலைத்திட்டமானது மூன்றுமாதகாலத்தில் முடித்துக் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் ஒரு கட்டிடத்தின் மதிப்பு சுமார் 8 மில்லியன்கள் ஆகுமெனவும், திருக்கோணமலை அரசாங்க் அதிபரின் சிபாரிசின் படியே தமது சங்கத்திற்கு இவ் வேலைத்திட்டம் வழங்கப்பட்டதாகவும் திரு.ஜெகதீசன் மேலும் குறிப்பிட்டார்.

## தடுப்பின்றி எகிறும் தண்ணீர் கட்டணம்

கடந்த 2012.10.01ம் திகதி முதல் அமுலாகும் வகையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் திருத்தப்பட்டுள்ளது. 2012.09.18ம் திகதி வர்த்தமானி நீர்க் கட்டணங்கள் அறிவித்தலின்படி சமுர்த்தி பெறும் நீர் பாவனையாளர்களுக்கான முதல் 15 அலகுகளுக்கும் வீட்டுப் பாவனையாளர்களுக்கான முதல் 5 அலகுகளுக்கும் சேவைகட கமடமணம் 50 ரூபாவாக காணப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆகக் கூடிய பாவனை கட்டணமாக 75 அலகுகளுக்கு 140 ரூபாவாக காணப்படும் எனவும் வர்த்ததானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டணங்களுடன் அரசவரி சேர்க்கப்படும் எனவும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டணங்களுடன் அரசவரி சேர்க்கப்படும் எனவும் சபை தெரிவித்துள்ளது.

## மூதூர் பிரதேச சபைக்கான புதிய உறுப்பினர் வே. மோகன்.



மூதூர் பிரதேச சபையின் புதிய உறுப்பினராக வேலாயுதம் மோகன் இன்று பதவி ஏற்றார்.

கடந்த 2010 இல் இடம்பெற்ற உளளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு.க.திருச்செல்வம் தனது உறுப்பினர் பதவியிலிருந்து விலகியமையையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக திரு.மோகன் இன்று 2012.11.08 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மூதூர் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் கௌரவ தவிசாளர். ஜனாப்.ஏ.எம்.ஹரீஸ் முன்னிலையில் பதவியேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன்போது சபையின் கௌரவ உறுப்பினர்களான ஜனாப்.நிஸ்மி. திரு.நாகேஸ்வரன். பீ.ரீ.எம்.பைசர். மற்றும் செயலாளர் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

## 125,000 இலங்கையரை அலைக்கழித்த காலநிலை

கடந்த வாரங்களில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 18 மாவட்டங்களில் உள்ள 31,000 குடும்பங்களை சேர்ந்த 125,000 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலைய ஊடாக பேச்சாளர் லால்குமார தெரிவித்தார். களுகங்கை, ஜின்கங்கை மற்றும் களனி கங்கைகளின் நீர் மட்ட உயர்வு காரணமாக தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கருத்து வெளியிட்ட அவர் அழுத்கம - மதுகம வீதியில் பகுதிகளும் வெலிப் பண்ணையில் அமைந்துள்ள காலிவீதியை இணைக்கும் தெற்கு அதிவேக சாலையும் நீரில் மூழ்கி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [illegible] வெலிப்பன்ன [illegible] தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். மேலும் மூடப்பட்ட அலுத்கம, மதுகம வீதிகளுக்கு பதிலாக தொடாங்கொட வீதியை பயன்படுத்தலாம் என தெரிவித்தார்.

கடந்த சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு காரணமாக கண்டி மாவட்டத்தில் 102 குடும்பங்களை சேர்ந்த 479 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கரிஸ்பத்துவ பிரதேசத்தில் 4 வீடுகள் முழுமையாகவும், இப்பிரதேசங்களில் 85 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார். எதிர்வரும் காலங்களில் சப்ரகமுவ, தென் மத்திய மாகாணங்களில் சீரற்ற காலநிலை தொடரும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## மாணவர் தலைவர் விழா




இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் இவ்வாண்டு மாணவத்தலைவராக தெரிவு செய்ப்பட்ட மாணவர்களால் மாணவர் தலைவர் விழா கொண்டாடப்பட்டது. இத்தினத்தில் மாணவத் தலைவர் களால் வைக்கப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற உயர்தரத்தில் கல்வி கற்கும் தரம் - 13 மற்றும் 12ல் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவத் தலைவர்களால் நடாத்தப்பட்ட அதிஷ்டலாப சீட்டில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதிபர் மற்றும் ஆசிரியர்களால் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

தை மாதம் திருக்கோணமலையிலிருந்து வெளிவ்ர இருக்கின்ற கலை இலக்கிய சஞ்சிகை ஒன்றுக்கு ஆர்வலர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அடுத்த வருடம் தை மாதத்திலிருந்து காலா ண்டிதழாக கலை இலக்கிய சஞ்சிகை ஒன்றை வெளிக் கொணர்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கலைஞர்களும் ஆர்வலர்களும் தங்கள் ஆக்கங்களை ஆசிரியர் கலை இலக்கிய சஞ்சிகை எனக் குறிப்பிட்டு இல. 159 A, கடல்முக வீதி, திருக்கோணமலை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

## படிப்படியாக மன்னராட்சியா?

இலங்கைளில் கிராமிய மட்டங்களில் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு தீர்வுகளை விரைந்து காண்பதற்கு கிராமிய சபைகளை அமைக்கும் யோசனையில் அரசு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

நீதிமன்றங்களில் ஏற்படும் நேர, கால, பண விரயங்களை தடுப்பதற்காகவும், கிராமங்களில் ஏற்படுகின்ற சிறு சிறு தகராறுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்காகவும் நீதித் துறையை சுமூகமாக இயங்க வைப்பதற்குமான ஏற்பாடாய் இருக்குமென மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே நேரம் வழக்குகளால் நீதிமன்றங்கள் எதிர்நோக்குகின்ற நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கென இலங்கை அரசியல் அமைப்பில் இணக்க சபைகள் மற்றும் ஒம்புட்ஸ்மன் ஆகியவை நடைமுறையில் இருக்கும் நிலையில் கிராமிய சபைகள் தொடர்பான முன்மொழிவுகள் கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் கிராமிய சபை அமைப்புக்கள் இலங்கையின் மன்னராட்சிக் காலத்தில் காணப்பட்ட தொன்றாகும். கிராமங்களை நிர்வகிக்க மன்னர்களின் கீழ் 'கம்சபா' என்னும் கிராமிய சபை 'கமிக, பருமக' ஆகிய கிராமத் தலைவர்களின் கீழ் இயக்கி வந்துள்ளமை குறிப்பிடதக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்ட பரம்பரை...

-நந்தினி சேவியர்-

-சென்றவார தொடர்ச்சி-

சண்ணின் பேச்சைக் கேட்பதற்கு நுளைவு கட்டணம் (ரிக்கற் மூலம்) வசூலிக்கப்பட்டது. மண்டபம் நிறைந்த கூட்டத்துடன் சொற்பெருக்கு நிகழும், பெரும் பெரும் பிரமுகர்கள் மண்டபத்தில் சமூகமளித்திருப்பர். அற்புதமான பேச்சுகளை சண் நிகழ்த்துவார். கட்சி நிதிக்கு அந்தப்பணம் உதவியது. கொழும்பிலும் சண்ணின் பேச்சுக்கு கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆம் தோழர்களே இன்றுவரை இப்படி ஒரு மனிதனின் பேச்சை நான் கேட்டதுமில்லை. கட்டணம் வசூலிப்பதை அறிந்ததுமில்லை, மூன்று மொழிகளிலும் மார்க்சிய தத்துவமுறையில் சரளமாக பேசும் ஆற்றல் பெற்றவர் தோழர் சண்.

மாவிட்டபுரம் ஆலயத்தின் தேர் சாதி வெறியர்களினால் எரிக்கப்பட்டு பழி எஸ்.ரி.என். மீது சுமத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். அடங்காத்தமிழன் சி.சுந்தரலிங்கமே சாதி வெறியர்களின் தலைவன் - என்னே வேடிக்கை - தமிழனே தமிழ் பேசும் மக்களின் எதிரி.

இந்த நேரத்தில்தான் சுபத்திரனின் 'எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும் நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும்' கவிதை வெளிவந்தது.

திருக்கோணமலைக் கவிராயரின் தா.சி. வில்வராசனின் 'மாவிட்டபுரத் திலோர் மந்தி நின்று மடைச்சேட்டை புரியுது வாசலில் குந்தி' என்னும் பாடலும் வெளிவந்தது.

வெட்கக் கேடான விடயம் என்ன வென்றால் தந்தை செல்வநாயகம் என தமிழர்களால் அழைக்கப்படுபவர் பிரதிநிதித்துவப்படுத்திய காங்கேசன் துறைத் தொகுதியிலேயே மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் அமைந்திருந்ததும், தளபதி அமிர்தலிங்கம் பிரதிநிதியாக இருந்த வட்டுக்கோட்டைத் தொகுதியிலேயே நிச்சாமம் (சங்கானை) இருந்ததுவும் மிக முக்கியமான விடயமாகும், சாதிப் பிரச்சினை தலை விரித்தாடிய அக்காலத்தில் எஸ்.டி.பண்டாரநாயக்கா எனும் சிங்கள தோழர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த போது தளபதி அமிர்தலிங்கம் சங்கானை சாங்காயாக மாறிவிட்டதாக எதிர் குரல் எழுப்பினார். எப்படி இருக்கிறது நண்பர்களே இவர்களது 'ஆண்டபரம்பரை' மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் இருந்த குறைபாட்டை! நான் உணர்ந்து கொண்டமையால் இன்றுவரை இவர்களையும், இவர்கள் வழிவந்தவர்களையும் எதிர்க்கத் தலைப்பட்டேன். நிச்சயமாக......

## சே மூத்த மகளுக்கு எழுதிய கடிதம்



**அருமையான ஹில்டிடா,**

இப்போது எழுதிக் கொண்டிருக்கிற இந்தக் கடிதம் ரொம்ப காலத்திற்கு பிறகு பெறுவாய். உன்னைப் பற்றியும், சந்தோஷமான உனது பிறந்த நாளை பற்றியும் சந்தோஷமான உனது பிறந்தநாளை கொண்டாடுவதையும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீ இப்போது ரொியவளாக இருப்பாய். ஒரு குழந்தையைக் கொஞ்சுவது போல எழுது முடியாது.

தொலைதூரத்தில் நமது எதிரிகளோடு சண்டையிட்டுக் கொண்டு இருக்கிறேன். இது ஒன்றும் மகத்தான விஷயமல்ல. எதோ ஒன்றை செய்கிறேன்.

நான் உன்னைப் பெருமையாய் நினைப்பதைப் போல நீயும் என்னை பெருமையாக நினைப்பாய் என நம்புகிறேன்.

இன்னும் நிறைய காலம் போராட வேண்டியிருக்கிறது. வளர்ந்த பிறகு நீயும் இந்த போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும். உன்னை தயார் செய்து கொள். பருட்சிகரமானவளாய் இரு. உன்னுடைய வயதில் நிறைய படிப்பதும், நியாயங்களை ஆதரிப்பதும்தான் அவைகள்.

இம்மா சொல்கிற படி கேள். சீக்கிரமே எல்லாம் தெரிந்து விடுமம் நினைக்காதே. காலாகாலத்தில் அவை உன்னை வந்து சேரும். பள்ளியில் நீ சிறந்தவளாக இருக்க வேண்டும். சிறந்தவள் என்றால் எல்லா அர்த்தத்திலும் படிப்பதும். புரட்சிகரமாய் இருப்பதும்தான். சொல்லப்போனால் நல்ல நடத்தை, அர்ப்பணிப்பு, தோழமையான நேசம் போன்றவைகள்தான் அவை. உன்னுடைய வயதில் நான் அப்படி இல்லை. வேறோரு சமூகத்தில் வாழ்ந்தேன். அங்கு மனிதன் மனிதனுக்கு எதிரியாக இருந்தான். நீ இன்னொரு அத்தியாயத்தில் வாழ்கிறாய் அதற்கு நீ பொருத்தமானவளாக இருக்க வேண்டும்.

வீட்டில் மற்ற குழந்தைகள் படிப்பதிலும், நன்றாக நடந்து கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும் முக்கியமாக அலெய்டிடா. அக்கா என்று உன்னிடம் அதிகமாக அன்பு வைத்திருக்கிறாள் அவள்.


சரி பெரிய மனுஷியே! திரும்பவும் உனக்கு என் பிறந்தநாள் வாழ்த்துக்கள். அம்மாவையும், கினாவையும் அணைத்துக்கொள். உன்னைப் பிரிந்திருக்கிற காலம் எல்லாவற்றிற்கும் சேர்த்து என்னை ஆரத்தழுவுகிறேன்.

# கடல் தின்ற நம் நிலம் - 4

கா .செந்தூரன்

## குமரிக் கண்ட அழிவு பற்றிக் கூறும் நம் தமிழ் இலக்கியங்கள்

தேடல்கள் எப்போதும் நம் இலக்குகளை அடைய செய்து விடும். இது எல்லைக்கல் பகுதிக்கு நூற்றுக்கு இருநூறு வீதம் சரியாகி போய்விட்டது. தமிழர் வரலாற்றில் பல ஓட்டைகள் இருந்தாலும் அந்த ஓட்டைகள் அடைக்கபடாமைக்கு தேடல் இன்மையும் வரலாற்று ஆசிரியர்களில் ஒற்றுமையாக, நம்பத்தகுந்த, பல்துறைகளிலும் வரலாற்றை நோக்காததும் ஒரு காரணமாக இருக்கலாம்.






அவற்றை உடைக்கவே எல்லைக்கல் எல்லாத்துறை ஆதாரங்களுடன் நம் வரலாற்றை தேட ஆரம்பித்தது .சென்ற வாரம் குமரி எப்படி அழிந்திருக்கலாம் என்று அறிவியல் ரீதியாக பார்த்தோம். உலகில் சில விடயங்கள் புதிராக இருந்தாலும் எங்கோ ஒரு இடத்தில் அதற்க்கான விடை இருக்கும். என்னதான் நம் குமரி எனும் வரலாற்று புதையல் பற்றி நாம் அறிவியல் ஊகங்களை வெளியிட்டாலும் , எழுத்து மூலமான குறிப்புகள் எப்போதும் நம்ப தகுந்தவை. குமரிக்கும் அப்படியான அழிவுக் குறிப்புக்களை நம்முடைய முன்னோர்கள் பதிவு செய்து விட்டனர். குமரி அழிவுக்கு பின் தப்பி பிழைத்த மற்றும் அதன் பின் வந்த மக்கள் தங்களது இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர்.

இந்த இலக்கிய பதிவு தொடர்பாக ஆராய்ந்த "மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர், பேரா.கா.சுப்பிரமணியப்பிள்ளை ஆகியோர் நமது பண்டைய இலக்கிய ங்களிற் பின்வருவன வற்றை கண்டு பிடித்தனர். சிலப்பதிகாரத்தில் ப∴றுளி யாறும், பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும்,கொடுங்கடல் கொண்டது பற்றிக் கூறப்பட்டுள்ளதை அவர்கள் குறிக்கின்றனர்.

அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
ப∴றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி (சிலப். 11:17-22)

புறநானூற்றில் பாண்டியனை வாழ்த்தும் பொழுது

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் ப∴றுளி மணலினும் பலவே
(புறம் 9)எனவும். வேறு ஒரு இடத்தில்
" தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்
"குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
(புறம் 6:67)

என நீழ்கின்றது அவர்களின் ஆய்வு. மேலும் இரண்டாம் சங்கம் இருந்த காலத்தில் கபாடபுரம் என்ற தலைநகரம் அழிந்த பின்னரும் குமரி ஆறு இருந்ததென்பதை தொல்காப்பிய சிறப்பு வரி,

"வட வேங்கடந் தென்குமரி எனவும்.
கலித்தொகையில்
"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட
(கலித். 104)எனவும்

குமரிக்கண்டத்தை கடல்கொண்டதை குறிக்கிறது என்றும் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இவ்வாறு குமரி அழிவு பற்றி கூறப்பட்ட இலக்கியங்களின் உண்மைத் தன்மைகள் கேள்விக்குரியவைதான் .(எல்லா இலக்கியங்களும் அப்படித்தான் இன்றுவரை) ஆனாலும் இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலையும் மனத்தாக்கங்களை அடிப்படையாக கொண்டு எழுபவைதான். குமரி அழிவு என்பது நிச்சயம் அம் மக்களை பாதித்து இருக்கும். அதன் வெளிப்பாடுகளாகத்தான் இவை இருக்கும்.

குமரி வரலாற்றில் ஈழத்தின் பங்கு என்ன?
அடுத்த வாரம் ...இன்னும் நடுவோம்....

## ஏழைகளின் உயிர்காக்க ஒன்றிணைவோம் அழைக்கின்றது அரிமா கழகம்

உணவுக்கால்வாய் மற்றும் சமீபாட்டுத் தொகுதியில் ஏற்படும் புற்று நோயினை அறிவதற்கான கருவியான கொலனஸ்கோபி (Colonoscopy) என்ற கருவி திருமலைப் பொது வைத்திய சாலையில் இல்லாதிருப்பது பெரும் குறையாகும் என கிங்கோரிங்கோ அரிமாக் கழகத்தின் தலைவர் Lion திரு. வசந்தகுமார் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இக் கருவியை வாங்குவதற்கு ஏற்படும் செலவு சுமார் 3 மில்லியன் ஆகும் எனவும் அத் தொகையில் சுமார் 2.5 மில்லியன் ரூபாய்களை 306C அரிமா மாவட்டத் தின் மாவட்ட ஆளுனர் Lion பா.ஜனரஞ்சன் அவர்கள் ஏனைய அரிமாக் கழகங்களின் ஊடாகத் திரட்டித் தருவதாக உறுதிய ளித்துள்ளார் [illegible] ரூபாய்களை [illegible] நடவடிக்கைகளில் திருமலை மாவட்டத் தின் அனைத்து அரிமாக் கழகங்களும் இறங்கி யுள்ளதாகவும் தெரிவித்தார்.


Lion திரு வசந்தகுமார்

"எமது மாவட்டத்தின் வறிய வகுப்பினர் இந்நோய்களால் பீடிக்கப்படும் போது கொழும்பு, கண்டி போன்ற மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் அங்கு பெரும் சிரமங்களை மொழி வேறுபாட்டாலும் வறுமையாலும் அவர்கள் எதிர்கொண்டு மனமுடைந்த போய்விடு [illegible] அதனை இல்லாதொழிப்பதற் காக மாவட்ட ஆளுனரின் சிந்தனையைச் செயலாக்கு வதற்காக இந் நிதி திரட்டல் நடவடிக் கைக்கு வர்த்தகர்கள், தனவந்தர்கள், நலன் விரும்பிகள் பொது மக்கள் என அனைவரும் திரண்டு உதவ வேண்டும்" என மேலும் அவர் தெரிவித்தார். மேலதிகத் தொடர்புகளுக்குமாவட்ட மேலதிகப் பொருளாளர் Lion பா. உதயசங்கர் அவர்களை அவருடைய கைத்தொலைபேசி எண் 0777357677 அழைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்து அணைத்தது இந்தியா. ஆட்டமிழந்தது தமிழர் தரப்பு?

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பூகோளக் கிரம மீளாய்வுக் கூட்டத் தொடர் முடிவுற்றுவிட்டது. இறுதி அறிக்கையையும் அதன் வலியுறுத்தல்களையும் இலங்கையிடம் கையளித்தாகி விட்டது.

அரச தகவல்களின் படி 210 பரிந்துரைகளில் சுமார் 100 பரிந்துரைகளை இலங்கை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று



அறிக்கைப் போரை ஆரம்பித்து விட்டது அரசு.

ஏற்றுக்கொள்ள முடியாது என அரசு அறிவித்துள்ள பரிந்துரைகளுக்குள் மிக முக்கியமான ஒரு உயிரியக்கம் காணப்பட்டது. அவ்வுயிரியக்கமானது எவ்வகையிலும் "காலக்கெடுவுக்குள் செய்து முடிக்கப்படவேண்டிய சர்வதேசக் கண்காணிப்புக்குட்படும்'' எந்தப் பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பதே.

பூகோளக் காலக்கிரம மீளாய்வுவின் போது மீண்டும் இலங்கையின் மனித உரிமையின் நிலை வெட்டவெளிச்சமா கியுள்ளமை மட்டுமே தமிழருக்குக் கிடைத்த ஒரு துருப்புச் சீட்டாகும்.

மற்றும்படி இலங்கை அரசு ஏற்க மறுத்த விடயங்களில் இழையோடிய மிக முக்கிய கருப்பொருட்களான "காலக்கெடு'' மற்றும் "சர்வதேசக் கண்காணிப்பு'' ஆகிய இரண்டையும் வலியுறுத்தும் எவ்விதமான வலுவையும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கண்காணிப்பகமோ அல்லது அதில் பங்குகொள்ளும் நாடுகளோ கொண்டிருக்காமை அக் கண்காணிப்பகத்தின் வலுவைக் கேள்விக்குள்ளாக்குகின்றது அல்லவா?

ஆனால் இக் காலக் கிரம ஆய்வு மீண்டும் தமிழ்த் தரப்பிற்கு இந்திய அரசின் பொருளாதார நன்மைப் புலத்தைத் தெளிவாக வெளிக்காட்டி விட்டது என்பதே உண்மை.

காலக்கிரம ஆய்வின் தொடக்க நாளான 05ம் திகதி இந்திய அரசின் பேச்சுக்களைக் கண்ணுற்றதும் அதற்கு அடுத்தநாள் தேசிய தமிழ் நாளிதழ் ஒன்று தலைப்பிட்டிருந்தது"ஆப்பு வைத்தது இந்தியா'' என்று. அதை வாசிக்கும் அனைத்துப் பாமர மக்களும் அன்றைய நாளைச் மகிழ்ச்சியாகக் கழித்திருப்பார்கள். எமது தமிழ்த் தலைமைகளும் கூட.

ஆனால் மீண்டும் 07ம் திகதி இறுதிப் பரிந்துரைகள் வெளியாகிய பின் அதே தமிழ் நாளிதழின் தலைப்பு "அந்தர் பல்டி அடித்தது இந்தியா" எனப் பிரசுரித்திருந்தது. அன்றைய நாள் மீண்டும் கனவுகள் கலையச் சாதாரண நாளாக நாம், கைகாட்டி மறிக்கும் காவல்துறையாளனுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தைக் காட்டி விட்டு திருமலைத் தெருக்களில் துள்ளித் துள்ளிப் பயணித்துக் கொண்டிருந்தோம்.

எமது நிலை இப்படியெனில் சில நாட்களுக்கு முன் இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்திருந்த எம் தலைவர்கள் சொன்ன கூற்றுக்களை நான் இக்கணம் மீட்டுகின்றேன். "இந்திய அரசின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டு விட்டது'', "வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தபோது (சிலிர்த்தது?)" போன்ற இன்னோரன்ன கதைகளின் ஊடாக எதிர்பார்த்த மாற்றம் எங்கே போய்விட்டது என்பதை யாரிடம் போய்க் கேட்பது என்பது புரியாப் புதிராகிக் கிடக்கின்றது.

இந்திய அணுகுமுறையில் மாற்றம் என்பது அதன் இரு முக்கிய காரணிகளில் தங்கியுள்ளது. அவற்றுள் ஒன்று இந்தியப் பொருளாதாரம், இரண்டு இந்தியாவின் ஆசியப் பாதுகாப்பு. அவையிரண்டிலும் தாக்கத்தைச் செலுத்தும் எவையுமே அந் நாட்டின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துமேயொழிய ஏனைய எவையுமல்ல என்பதை நாம் ஆணித்தரமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியப் பொருளாதாரமானது இலங்கையிடனான உறவால் எப்போதுமே நன்மையை அடைந்துவரும் ஒன்றாகவே உள்ளது. அதற்கு மேலும் வலுச் சேர்ப்பதற்கு தற்போது இலங்கையில் எதிர்பார்க்கப்படும் மூன்று இந்திய முதலீடுகள் காரணமாக அமைகின்றன. ஹம்பாந்தோட்டையில் சீனியாலை, சம்பூரில் வாகன உதிரிப்பாக ஆலைகள், கொழும்பின் மத்தியில் வர்த்தக நிலப்பரப்பு ஆகிய மூன்று விடயங்களுக்கும் இலங்கையின் ஆசி இந்தியாவிற்கு வேண்டும். அத்துடன் இந்திய அரசு ஒன்றும் நடுத்தர மக்களின் வரிப்பணத்தில் வாழவில்லை. அதன் வருமானம் மிகப் பெரும் டாட்டாக்களிலும், அம்பானிகளிலும் தான் தங்கியிருக்கின்றன. அவர்களின் பணமே அரசியலையும் நடத்துகின்றது என்பதைப் புரிந்துகொள்வது ஒன்றும் சிரமமல்ல. எனில் அவர்களின் முதலீடுகளின் நலனும் முக்கியமானது தான்.

அடுத்து இந்திய முடிவுகளை ஆட்டிப்படைக்கும் கருவி ஆசியப் பாதுகாப்பாகும். ஆசியப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் இலங்கையின் கேந்திர நிலைகளில் சீனா உள்ளதைப் போலவே இந்தியாவும் நுழைய வேண்டிய தேவை இங்குள்ளது. பொருளாதாரப் போர்வைக்குள் பாதுகாப்பு முறைமைகளைக் கட்டிக்கொள்ளுதல் என்பது புதிய காலனித்துவவாத சிந்தனைகளின் உலமயமான முகம் என்பது எமக்கெல்லோருக்கும் தெரியும். கந்தளாய் சீனியாலையை விடுத்து ஏன் இந்தியா ஹம்பாந்தோட்டைச் சீனியாலைக்குள் நுழைய எத்தனிக்கின்றது என்பதைப் பாதுகாப்புக் கண்கொண்டு பார்ப்பவர் களுக்குத் தெளிவாகத் தெரியும்.

எனவே இவ்விரு ஆழிகளின் அடிப்படையில்தான் இந்திய அரசின் அணுகுமுறை மாற்றமடையுமே தவிர ஏனைய உணர்திறன் விடயங்கள் எல்லாம் அதன் வெளியுறவுக் கொள்கைகளை எப்போதுமே மாற்றப் போவதில்லை.

ஆகவே இவ்விரு விடயங்கள் தொடர்பாகவும் தமிழர் தரப்பின் நிலை எவ்வாறுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதாவது சிறிதளவேனும் பொருளாதார வலுவோ, பாதுகாப்பு வலுவோ அற்ற தரப்பொன்றிற்கான அறவழித் தீர்வுக்கு ஆதாயமின்றி இந்தியா உதவும் என யோசிப்பது அவ்வளவு பொருத்தமாயிருக்காது.

அவ்வாறாயின் ஏன் இந்தியா இலங்கை அரசை இறுக்குவதும் நெகிழ்த்துவதுமான போக்கைக் கையாள்கின்றது என்பதை நாம் நோக்க வேண்டும்.

இலங்கையை இறுக்குவதற்கான பார்வையை நாம் இரண்டாகப் பிரித்துப் நோக்கலாம்.

இலங்கைக்கான எந்தவொரு சர்வதேச அணுகுமுறைக்கும் இந்தியப் பங்களிப்பு தேவையாயிருப்பதைப் போன்ற போக்கை எப்போதுமே இந்தியா பேணிக் கொள்கின்றது. அப்போதுதான் இந்தியா இலங்கைக்குக் கிடைக்கவுள்ள எந்தத் தீர்விலும் தனது நலனைப் பேண முடியும். எனவே சர்வதேசப் பார்வைக்காக இந்தியா இலங்கையை இறுக்குவதாக காட்டுவது அதன் முதலாவது வகை. அதற்கான இரண்டு அண்மைய உதாரணங்களும் முறையே மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கைக்கான வாக்களிப்பில் இலங்கையை எதிர்த்து வாக்களித்ததும் (அதன் பயனாக அடுத்து வந்த பூகோள மீளாய்வில் அறிக்கையை உருவாக்கும் குழுவில் இடம்பிடித்ததும்,) அதன் பின் மனித உரிமைக் கவுன்சிலின் பூகோள மீளாய்வுக் கூட்டத் தொடரின் முதல் நாளில் இலங்கை தொடர்பாக ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்தைச் செலுத்தியதும்.

இலங்கையை இறுக்கும் இரண்டாவது பார்வை இலங்கையின் நடவடிக்கைகளுக்குள் தனக்கிருக்கும் முக்கியத்துவத்தை அடிக்கடி நினைவு படுத்துவதன் ஊடாக இலங்கையிற் காலூன்றித் தனது பொருளாதார, ஆசியப் பாதுகாப்பு நலன்களைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கும் ஆகும்.

இவ்வாறு இறுக்கும் போதெல்லாம் நாமும் நம் தலைவர்களும் மகிழ்வது ஒன்றும் தவிர்க்க முடியாததுதான்.

இலங்கையை நெகிழ்த்தும் போக்கை இந்தியா கையாளும் முறை இலங்கை எச் சந்தர்ப்பத்திலும் முற்று முழுதாக சீன, பாகிஸ்தானிய உறவுக்குட் சென்று விடாமற் பாதுகாத்துக் கொள்ளவே. அதற்காக எவ்வளவு தூர விட்டுக் கொடுப்பிற்கும் இந்தியா தயாராகவே உள்ளது. அதனைப் புரிந்துகொள்ள மிகச் சிறிய உதாரணமொன்றைப் பார்க்கலாம். இறந்த(?) பிரபாகரனின் இறப்புப் பத்திரத்திற்களித்த முக்கியத்துவத்தை இந்தியாவில் பிடிவிராந்து பிறப்பிக் கப்பட்டுள்ள கே.பிக்கு இந்தியா வழங்கவில்லையே!

இங்கு தற்போது ஒரு சந்தேகம் வலுக்க ஆரம்பித்துள்ளது. கடைசி இந்தியப் பயணத்தின் பின்னர் சீனாவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு



இரண்டு வரலாற்று முன்நகர்வுகளைச் செய்துள்ளது. முதலாவது நகர்வாக அவ்வமைப்பு சீனத் தூதுவரைச் சந்தித்துப் பேசியுள்ளது. இரண்டாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இடைநிலை அங்கத்தவர்களின் குழுவொன்று சோசலிச மாநாட்டுக்காக சீனாவிற்குச் சென்றுள்ளது.

சீனத் தூதுவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சந்திக்கும் என்பது இந்தியப் புலனாய்வுத் துறைக்குத் தெரிய



வராமலிருப்பதற்குச் சாத்தியங்கள் மிகக் குறைவே.

அ ச செய்தியை முன்னரே தெரிந்திருக்கும் ஓர் அண்டை நாட்டு அரசின் அணுகுமுறை எவ்வாறிருக்க வேண்டுமோ அவ்வாறே அச்சொட்டும் பிசகாமல், முன்னெப்போதுமில்லாதவாறு இந்தியா தமிழர் தரப்பைச் சந்தித்தபோது "புரிந்துணர்வுடனும், பரிவுடனும்'' சந்தித்ததா? எனும் சந்தேகம் யாருக்கும் வராமலில்லை

எனவே இந்திய நலன்களின் அடிப்படையில் தமிழர் தரப்பின் தந்திரோபாய நகர்வுகள் எவ்வாறமையப் போகின்றன?

காலம் எமது பிரச்சனைகளைத் தீர்க்குமாயின் தமிழர் தரப்பின் நகர்வுகள் வெற்றியளித்திருக்கும்.

## திருமலைக்காய்ப் புதிய தொலைக்காட்சி அலைவரிசை தரிசனம்

திருமலையில் மூவின சமூக கலை கலாச்சார ஆன்மீக விழுமியங்களை வெளிக்கொணரும் முகமாக திருக்கோணமலை சன்கேபில் ஊடாகவும் புறநகர் பகுதியான உப்புவெளி சட்லைட் கேபில் ஊடாக கடந்த 28.10.2012 முதல், பிரதி ஞாயிறு மாலை 6 மணி தொடக்கம் 9 மணி வரை சன்கேபில் சிஸ்டத்தில் 16வது அலைவரிசையிலும் உப்பு வெளியில் SVE அலைவரிசையிலும் ஒளிபரப்பாகி வருகிறது.

மத பேதங்களை கடந்து கலை கலாச்சார பண்பாடு பாரம்பரியங்களை மீட்டிக் கொள்வதற்காகவும் இளைஞர்கள் இடையே கல்வி, ஆன்மீக நன்னெறி மற்றும் ஒழுக்க [illegible] தலும் இனங்க[illegible] நம்பிக்கை புரிந்துணர்வு சகவாழ்வு போன்ற வினைத்திறனை உருவாக்குவதே தரிசனத்தின் இலக்காகும் என அதன் நிகழ்ச்சி விரிவாக்க இணைப்பாளர் திரு கனகசிங்கம் மலைமுரசுக்கு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசின் விளையாட்டு செய்திகள்

## திருமலையின் WYN துடுப்பாட்டப் போட்டி

திருக்கோணமலை முன்ன ணிக் கழகங்களான யங் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம், நோமன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் வேல்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன பங்குபற்றும் முக்கோண ஒருநாள் போட்டிக் கிண்ணமான WYN கிண்ணத்தின் இறுதிப்போட்டி கடந்த 04.11.2012 அன்று நடைபெற்ற முடிந்தது. மழையின் காரணமாக பிற்போடப்பட்டிருந்த இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை அன்று ஞாயிறு உதயத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

இப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் வேல்ஸ் மற்றும் யங் ஒலிம்பிக் கழகங்கள் விளையாடியிருந்தன. இதில் வேல்ஸ் விளையாட்டுக் கழகம் ஆறு விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி யங் ஒலிம்பிக் மற்றும் நோமன்ஸ் வி.கழகங்க ளிடையே நடைபெற்றது. இதில் யங் ஒலிம்பிக் வி.கழகம் 75 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது. மழைகார ணமாக இப்போட்டியானது 37 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இத்தொடரின் மூன்றாவது போட்டியானது வேல்ஸ் மற்றும் நோமன்ஸ் விளையாட்டுக் கழகங்களிடையே 02.11.2012 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் மழைகாரணமாக சற்றுதாமதமாகவே ஆரம்பமானது. 40 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாவே இது அமைந்திருந்தது. இதில் நோமன்ஸ் வி.கழகம் 65 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றிருந்தது.

லீக் முறையிலே நடைபெற்ற இப்போட்டித் தொடரில் மூன்று அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்று சமபுள்ளிகளைப் பெற்றிருந்தாலும் நிகர புள்ளிகள் அடிப்படையில் நோமன்ஸ் வி.கழகம் மற்றும் யங் ஒலி. வி. கழகம் என்பன இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதிபெற்றிருந்தன.

சமபலம் கொண்ட இரு அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தமை கிரிக்கற் ரசிகர்களுக்கு ஒரு சிறந்த போட்டி ஒன்றை வழங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பை எல்லோரிடமும் ஏற்படுத்தியிருந்தது. அதற்கு அணி சேர்ப்பதுபோல் மழையும் அவர்களுக்காக விட்டுக் கொடுக்க நவம்பர் நான்காம் திகதி காலை பத்து மணியளவில் போட்டி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நோமன்ஸ் விளையாட்டுக் கழக அணித்தலைவர் சக்தி பிரணவன் முதலில் துடுப்பெடுத்தாட விருப்பம் தெரிவித்தார். போட்டி ஆரம்பத்திலிருந்தே யங் ஒலிம்பிக்ஸ் கழகப் பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவிப்பதில் சிரம ங்களை எதிர்நோக்கியிருந்தார்கள் நோமன்ஸ் துடுப்பாட்ட வீரர்கள். குறித்த நேர இடைவெளிகளில் விக்கட்டுகளும் வீழ்த்தப்பட 43 ஓவர்களுக்கு மாத்திரம் முகம் கொடுத்து சகல விக்கட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை மாத்திரமே நோமன்ஸ் கழகத்தினரால் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதில் டிக்சன் 52 ஓட்டங்களையும், அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி பெனி 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் யங் ஒலிம்பிக்ஸ் கழக வீரர் நிமால் 20 ஓட்டங்களுக்கு மூன்று விக்கட்டு களைக் கைப்பற்றியிருந்தார்.

ஓவருக்கு சராசரியாக மூன்று ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கோடு பதிலுக்குத் துடுப்பெ டுத்தாட ஆரம்பித்த யங் ஒலிம்பிக் கழகத்தினரின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களால் சரியான ஒரு ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்க முடியாதிருந்த போதும் மூன்றாவது இலக்கத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய பிரகதீஸ் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணிக்காக 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார். ஆனாலும் அவரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் எவரும் துடுப்பாட்டத்தில் பெரிதாக சோபிக்கவில்லை. நோமன்ஸ் வி. கழக அணியினரின் வேகமானதும் விவேகமானதுமான பந்துவீச்சில் அணித்தலைவர் நிரோஷன் இறுதிவரை போராடி 34 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்து வெளியேறிச் செல்ல அணி வெற்றி இலக்கை அடையமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இறுதியில் 32.4 ஓவர்களில் 135 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற வேளையில் சகல விக்கட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியிருந்தது. நோமன்ஸ் கழக வேகப்பந்து வீச்சாளர் ஜேசு மீண்டுமொருமுறை சிறப்பாகப் பந்துவீசி ஏழு ஓவர்களில் 23 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கட்டுகளைக் கைப்பற்றியதோடு இறுதிப் போட்டியின் போட்டி நாயகனாகவும் தெரிவு செய்யப் பட்டார்.

இப் போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக நோமன்ஸ் கழக வீரர் டிக்சனும் சிறந்த பந்து வீச்சாளராக வேல்ஸ் கழகத்தின் பிரசாத் அவர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக நோமன்ஸ் வி. கழகத்தின் அணித தலைவர் சக்தி பிரணவன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து மூன்றாவது வருடமாக (2010/2011/2012) வெற்றியை தனதாக்கி கொண்ட நோமன்ஸ் கழகத்தினருக்கு வெற்றிக் கிண்ணத்தை நோமன்ஸ் கழக தலைவர் திரு. சக்திபவன் அவர்கள் வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இறுதி வைபவமாக அடுத்த வருடம் WYN கிண்ணப் போட்டியை நடத்த விருக்கும் யங் ஒலிம்பிக் விகழகத்தின் செயலாளர் திரு. T.சிவராசா அவர்களிடம் WYN கிண்ணக் கொடியினை கையளிக்கும் வைபவம் இனிதே நடைபெற்றதோடு இந்த வருடம் WYN கிண்ண போட்டி நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

-அடிவாசன்-

## யானை வால்க் காதலால் சிக்கினார் கிராமவாசி

யானையின் வாலில் உள்ள மயிரைக் கவருவதற்காக மின்சார வேலி அமைத்து யானையொன்றை கொலை செய்ய முயன்ற பிரதேசவாசி ஒருவரைச் சேருநுவரவின் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

சிறிமங்களபுர கிராமவாசியான இவர் யானைகுட்டியின் வாலில் மயிர் பிடுங்குவதற்காக வைத்த மின்சாரக் கண்ணியில் குறித்த யானைக் குட்டி தப்பிவிட்டது. எனினும் தனது ஆசை நிறைவேறாததால் யானையை துரத்தித் துரத்தி தன்னால் தயாரிக்கப்பட்டிருந்த கூரிய இரும்பு ஆயுதத்தால் அவ் யானைக் குட்டியைத் தாக்கி நடக்க முடியாது விழுந்த யானையின் வாலை வெட்டித் தன் காதலைத் தீர்த்துக் கொண்டுள்ளார் இக் கிராமவாசி.

சம்பவத்தின் போது யானை உயிர்த்தப்பியுள்ள போதிலும் கூரிய ஆயுதத்தினால் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளது என வனராசிகள் அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், மேற்படி யானையின் வால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் யானைக்கான சிகிச்சைகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்




கடந்த 7.11.2012 அன்று தி/பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற சந்தைப்படுத்தல் செயற்பாட்டின் போது எடுக்கப்பட்டவை

## உல்லாச விடுதியில் மாகாண சபை உறுப்பினர்கள்

கிழக்குமாகாண சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு கடந்த 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் நிலாவெளி உல்லாசவிடுதியில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் ,மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## சின்மயா மிசனின் வெற்றிக்கான இரகசியம்




இலங்கை சின்மயா மிசனின் கீழியங்கும் சின்மய யுகேந்திரா அமைப்பின் ஏற்பாட்டில் உயர்தர மாணவர்கள் மற்றும் 25 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களுக்கான "வெற்றிக்கான இரகசியம்" என்ற ஆற்றல்களை வெளிக்கொண்டு வருதல் மற்றும் சுய முன்னேற்ற பயிற்சி முகாம் வருகின்ற நவம்பர் 30ம் திகதி தொடக்கம் டிசெம்பர் 02ம் திகதி வரை திருக்கோணமலை மூன்றாம் கட்டையில் அமைந்துள்ள Grace care center ல் நடைபெற உள்ளது. இப் பயிற்சி முகாமில் உரைகள், காட்சியமைப்புக்கள் ,உரையாடல்கள் ,கருத்தரங்குகள் ,ஆன்மீகம், போட்டிகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் கைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.


திரு உ[illegible] 0715632100
திரு .நி[illegible] 0772322629



[illegible] அன்று தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற [illegible]சில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பாராட்டு வைபவத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலைவிதிக் கேள்வி – எவ்வாறு ?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கிராமக் கட்டமைப்புக்களை வடிவமைத்துக் கொள்வதற்கு ஓர் பெரும் தடை இருக்கின்றது என நாம் கடந்த வாரம் பேசினோம் அல்லவா? அத்தடை எதுவெனில் அவ்வமைப்பு தற்போது வரை ஓர் தனிக் கட்சியாகப் பதியப்படாமலிருப்பதே ஆகும். ஓர் தனிக்கட்சியாகப் பதியப்பட்டால் மட்டுமே கிராமியக் கட்டமைப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இலகுவாக ஏற்படுத்த முடியும். இல்லாது விட்டால் எவ்வாறு கிராமிய மட்டக் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவது?

ஐந்து கட்சிகளும் தனித்தனியாக கிராமிய மட்டக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தினால் என்ன? என்று நாம் நினைக்கலாம். அவ்வாறு நிகழுமாயின் அதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழிக்கும் ஆப்பாகப் போய்விடும். ஏனெனில் சிந்தித்தித்துப் பாருங்கள் ஒரு சிறிய கிராமத்தில் ஐந்து கட்சிகளும் ஐந்து கட்டமைப்புக்களை உருவாக்கினால் ஆரோக்கியமான கருத்தாடல்களா அங்கு இடம்பெறும் என்று? இல்லவே இல்லை. அவ்வமைப்புக்களிடையேயும் அவை சார்ந்த உறுப்பினர்களிடையேயும் அடிதடிதான் எஞ்சும். அச் சண்டை மெதுவாகப் பரவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்தும் விடும். அவ்வாறாயின் ஏன் பிரதேசங்களை தம்மிடையே ஐந்து கட்சிகளும் பிரித்துக்கொண்டு கிராமியக் கட்டமைப்புக்களை நிறுவினால் என்ன? என்று நாம் சிந்திக்கலாம். அங்கும் பெரும் இழுபறி நிலையே எஞ்சும் என்பதற்கு எமது வரலாற்றில் மற்றோர் உதாரணமும் உண்டு. போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலங்களில் வலுவான போராட்ட அமைப்புக்களா இருந்த அமைப்புக்கள் பிரதேசங்களைத் தம்மிடையே பகிர்ந்துகொண்டே நடவடிக்கைகளை முன்னெடுத்தன. சிறிது காலத்தின் பின் ஒருவரது பிரதேசத்திற்குள் மற்றொருவர் வருகின்றனர் என குற்றச்சாட்டுக்கள் ஆரம்பமாகி பின்............. அழிந்துதானே போனோம்.

எனவே வேறு எந்த முறையிலாவது கிராமியக் கட்டமைப்புக்களை நிறுவும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபடுமாயின் அதற்கான குழியை அவ்வமைப்பே வெட்டத் தொடங்குகின்றது என்பது வெளிச்சமாகும்.

**– மாயன் –**

இனி என்னென்ன வாய்ப்புக்கள் தமிழரின் பிரச்சனையை தீர்ப்பது எவ்வாறு எனும் தலைவிதிக் கேள்விக்கான பதிலைத் துணிவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு என்பதை ஆராயலாமா?

முதலாவது மிகக்காத்திரமான வாய்ப்பாக இருப்பது உலகலாவிய ரீதியில் தமிழரின் பிரச்சனையைக் கதைக்க வேண்டிய முற்று முழுதான அரசியல் முகம் கொண்ட அமைப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்படுவதும் அதற்குக் கிடைத்துள்ள உலகலாவிய அங்கீகாரமும் தான். அவ் அங்கீகாரத்தை உண்மையிலேயே உலக நாடுகள் மே மாதம் 2009ற்குப் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு முற்றுமுழுதாக வழங்கியிருந்தன. அதை ஏன் என ஆராயலாமா?

2009 மே மாதம் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமாக உலகநாடுகள் கருத்திற் கொண்டிருந்தன. அவ்வாறான கருத்தை உருவாக்குவதில் அரசும் வெற்றியடைந்திருந்தது. ஏனெனில் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியும் இருந்தது. அத்துடன் அவ்வுருவாக்கத்தின் பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்தும் இருந்தனர். அத்துடன் பல வேட்பாளர்களை விடுதலைப் புலிகளே தேர்வுசெய்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கொடுத்திருந்தனர். பல தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதும் அவர்களின் சொற்படி விரும்பியோ விரும்பாமலோ நடப்பதும் நிகழ்ந்து கொண்டேதான் இருந்தது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகம் அரசியல் தோல் போர்த்திய புலிப் பண்புகளைக் கொண்டிருப்பதான சந்தேகத்தைத் தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தி விட்டிருந்தன. அக்காலப் பகுதியில் பல்கேரியாவிலிருந்து வந்திருந்த உணவுப் பொருட்கையாள்கை வல்லுனர் ஒருவருடன் நீண்ட பயணமொன்றைச் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வேளையில் அவருடன் எமது மண்விடுதலைப் போரின் போக்கைப் பற்றிக் கதைத்தபோது அவர் கூறிய விடயம் யாதெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாக விடுதலைப் புலிகளிலிருந்து பிரித்து அவர்களுக்கென தனியான இலக்குகளை உருவாக்கி அவற்றை அடைய அவர்களை முயற்சிக்குமாறு விடுதலைப் புலிகள் வலியுறுத்த வேண்டும் எனவும் அவ்வாறு நிகழும் பட்சத்திலேயே உலக நாடுகளுக்கு தமிழர் பிரச்சனை தொடர்பாக கதைக்கும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு உருவாக்கப்பட்டு விடும் என்றும் கூறினார். அத்துடன் அதனை மற்றோர் விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் அவர் இணைத்து ஆராய்ந்தார்.

அவ்விடுதலைப் போராட்டம் ஐரிஸ் விடுதலைப் போராட்டமாக இருந்தது. ஐரிஸ் விடுதலை இராணுவம் ஐரிஸ் அரசாலும் பிரித்தானிய அரசாலும் பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தப்பட்டுத் தடைசெய்யப்பட்ட பின் அதன் அரசியல் முகமாக, விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் அரசியல் அமைப்பாக சின்பெயின் (Sinn Fein) செயற்படத் தொடங்கியது.

மண்ணுக்குள் ஆணிவேருக்குள் ஐரிஸ் இராணுவத்திற்கும் சின்பெயினுக்கும் தொடர்புகள் இருந்தாலும் வெளி விரிந்த கிளைகளில் அத் தொடர்புகள் தெரியவரவேயில்லை. அதனால் ஐரிஸ் விடுதலைப் போரை ஐரோப்பா முழுவதும் ஏன் உலகம் முழுவதும் தாங்கிச்செல்லும் வல்லமையை சின்பெயின் பெற்றுக்கொண்டிருந்தது. அவ்வாறான அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009 மே மாதத்திற்கு முன் வெளித்தெரியவில்லை. அவ்வாறு வெளித்தெரிதலை விடுதலைப் புலிகள் விரும்பவுமில்லை.

2009 மே மாதத்தின் பின் அச் சாயத்திலிருந்து முற்றுமுழுதாக வெளிவந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் பிரச்சனையை எவ்வாறு தீர்க்கலாம் என்பதை உலகம் நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்கான சிறந்த ஓர் வாய்ப்பாக இதனைக் கெள்ளலாம்.

ஏனைய வாய்ப்புக்களைப் பற்றிப் ....பின்னர் பேசுவோம்.....................

## 2013 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவின் சுருக்கம்.

### வருமானங்கள்

- சுற்றுலாத்துறை வருமானமாக 2.5 பில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆடைத் துறையிலிருந்து 5000 மில்லியன் டொலர் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.
- வெளிநாட்டு மதுபான வகைகளுக்கு 25 வீத வரி
- பல்பொருள் அங்காடிகளிலிருந்து காலாண்டில் ரூபா 500 மில்லியன் வருவாய் எதிர்பார்ப்பு
- ஓட்டப்பந்தயக் கார்களுக்கான வரி குறைப்பு.
- ஒரு லீற்றர் பால் 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும். இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவுக்கான உயர் வரிகள் தொடர்ந்தும் இருக்கும்.

### செலவுகள்

- நிரந்தர வருமானமில்லாத 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 5000 ரூபா
- வறிய பிரதேச மாணவர்களுக்காக சத்துணவும் சப்பாத்தும் வழங்கப்படும். நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கு அரையாண்டுக்கு ஒரு தடவை சீருடை.
- கல்வித் துறைக்கு 306 பில்லியன் ரூபா (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 வீதம்) ஒதுக்கீடு.
- வறட்சியினால் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள் வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்கள் பெரும்போகம் வரை நீக்கம். வட்டி முற்றாக நீக்கம்.
- நீர்ப்பாசன அபிவிருத்திக்காக 102 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு 2000 மில்லியன் ரூபா.
- அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு 1500 ரூபாவாக அதிகரிப்பு
- லக் சத்தொச விற்பனை நிலையங்களை ஆயிரமாக அதிகரிப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திய. உற்பத்திகளின் தரத்தை முறையாகப் பேணிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவி
- ஊடகவியலாளர். கலைஞர்களுக்கு வட்டியில்லா கடனைப் பெற்றுக்கொடுப்பதற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக 125 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- பாதுகாப்பு பிரிவினருக்காக 3 வருடங்கள் செல்லுபடியாகும் வகையில் நிவாரண வீட்டுக் கடன் வசதி. அதற்கென 2013 வரவு – செலவு திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
- 2013 ஆம் ஆண்டில் பொலனறுவை. அம்பாறை. திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தத்திட்டமிட்டுள்ள தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

- 2013 ஆம் ஆண்டு வடக்கில் மாகாண சபைத் தேர்தல்.
- வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்கத் தடை.

வரவு – செலவுத் திட்டம் 2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிஞ்சு முரசு

## உண்ணா சொத்து மண்ணாய் போகும்

நெற்குருவியும் சிட்டுக்குருவியும் நல்ல நண்பர்கள் இரண்டும் எப்போதும் ஒன்றாகவே உணவு தேடச் செல்லும் நெற்குருவியினதும், சிட்டுக்குருவியினதும் கூடுகள் வயிலிலுள்ள மரம் ஒன்றில் இருந்தது.



நெல் வயலில் உள்ள மரத்தில் அவற்றின் கூடுகள் இருப்பதால் நெல் முற்றுகின்ற காலத்தில் அவற்றிற்கு உணவுக்கு பஞ்சம் இருக்காது. நெல் அறுவடை முடிந்தாலும் சிதறிக் கிடக்கின்ற நெல்மணிகள் அவற்றிற்கு உணவாக அமையும். இதைவிட மற்றைய காலங்களில் உணவுக்கு தட்டுப்பாடு இருக்கும். இக்காலங்களில் உணவுக்காக நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கும் இது வழமையாக நிகழ்வதே.

நெற் கதிர்கள் முற்றி இருந்த காலம் அது. உணவு நிறைந்து காணப்பட்டது. சிட்டுக்குருவி ஒரு யோசனையை சொன்னது.... 'என்ன.....? நெற்குருவி நெற்குருவி தற்போது எமக்கு நிறைய உணவு கிடைக்கிறது. நாம் சாப்பிட்டது போக மீதி நெல்லை சேர்த்துவைப்போமா? அது எமக்கு உணவு இல்லாத நேரத்தில் உதவும்' 'இது நல்ல யோசனையாக இருக்கிறதே' என்றது நெற்குருவி.

இரண்டும் உணவு கிடைக்காத காலத்துக்காக நெல்லை சேகரிக்க தொடங்கின. உணவு சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டதால் இரண்டு குருவிகளுக்கும் தம்முள் கதைத்துக் கொள்ள நேரம் கிடைக்கவில்லை.

உணவு தட்டுப்பாடான காலம் வந்தது இரண்டு குருவிகளும் தாம் சேர்த்து வைத்த நெல்மணிகளை உண்ணத் தொடங்கின. அந்த காலத்தில் வெகு தூரம் உணவு தேடி அலைய வேண்டிய தேவை ஏற்படவில்லை.

உணவு தட்டுப்பாடான காலம் முழுவதும் தமது சேமிப்பிலிருந்த உணவை உண்டு வந்தன. இது இரண்டு பறவைகளுக்கும் பிடித்திருந்தன. அவ்வாறே உணவுகளை ஒவ்வொரு முறையும் சேமிப்பபோம் என முடிவெடுத்தன. உணவை சேமிக்கும் காலத்தில் முடிந்தளவு இரண்டு பறவைகளும் ஓய்வு நேரத்தில் கதைத்துக் கொண்டன.

சிட்டுக்குருவியினதும் நெற்குருவியினதும் செயற்பாட்டை அந்தமரத்தில் இன்னொரு கூட்டினுள் இருந்த புளுனிக் குருவி கவனித்து வந்தது. தானும் அவைகளைப் போல் உணவை சேகரிக்க முடிவெடுத்தது. சேமிக்க தொடங்கியது. அதுவும் உணவு தட்டுப்பாடான காலத்திலும் வயிறு நிறைய உணவு உட்கொண்டது. புளுனிக் குருவிக்கு நிறைய உணவை சேர்க்க சேர்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

புளுனிக் குருவி தனது சாப்பாட்டின் அளவை குறைத்து உணவை சேகரிக்க ஆரம்பித்தது. இரவு, பகல் என்று பாராமலும் உணவை சேகர்த்தது உணவு தட்டுப்பாடான காலத்திலும் உணவுக்காக நீண்டதூரம் சென்று வந்தது. இதனாவ் அதன் உடல்நிலை மோசமாக வரத்தொடங்கியது.

இதனை அவதானித்த சிட்டுக் குருவியும், நெற்குருவியும் புளுனிக் குருவியிடம் 'உணவு சேர்ப்பதை விட்டுவிட்டு உனது உடல்நிலை மேல் முதலில் கவனம் எடு' என்று சொல்லின. புளுனிக் குருவி அவை சொல்வதை கேட்கவே இல்லை.

ஒரு நாள் புளுனிக் குருவிக்கு உடல் முடியாமல் போனது. எழுந்து நடக்கவே முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டது. 'தாம் நோய்பட்டு விட்டோமே... பரவாயில்லை சாம் சேகரித்து வைத்த உணவு இருக்கிறதே அதை உண்டு பழையபடி வருவோம்..' என்று நினைத்தது.

அந்தக் காலத்தில் அங்கு பலத்த மழை பெய்ய தொடங்கியது. புயல் காற்று சுழன்று வீசியது. மின்னலும் இடியும் உடலை நடுங்க வைத்தன.

நெற்குருவியும், சிட்டுக் குருவியும் தத்தம் கூடுகளில் இருந்தன. இங்கு புளுனிக் குருவி நோய்வாய்ப் பட்டிருந்தது. அப்போது அடித்த பெரும் புயல் காற்றினால் புளுனிக்குருவியின் கூடு கீழே விழுந்தது. அது சேர்த்து வைத்த உணவுகள் அனைத்தும் மழையால் அடித்து செல்லப்பட்டன. புளுனிக் குருவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு மாதிரி எழுந்தது. சிட்டுக்குருவியின் வீட்டுக்கு சென்றது. சிட்டுக்குருவிக்கு புளுனிக் குருவியின் நிலையை பார்க்க கவலையாக இருந்தது. அது தான் சேர்த்து வைத்திருந்த உணவில் ஒரு பகுதியை புளுனிக் குருவிக்கு கொடுத்தது.

அவ்வேளை நெற்குருவியும் சிட்டுக்குருவியின் வீட்டுற்கு வந்தது. புளுனிக் குருவி அழுது அழுது தனது நிலையை சிட்டுக்குருவியிடமும், நெற்குருவியிடமும் சொன்னது. அதை பார்க்க பாவமாக இருந்தது. அப்போது நெற்குருவி சொன்னது. 'பார்த்தாயா நீ உண்ணாமல் சேர்ந்த உணவு உனக்கு கிடைக்காமலேயே போய்விட்டது. இதைத்தான் உண்ணா சொத்து மண்ணாய் போகும் என்பார்கள் என்றது. 'சேமிப்பு பழக்கம் இருக்க வேண்டியது தான்' அதற்காக இப்படியா...? தேவையானது போக மேலதிகமான தைத்தான் சேமிக்க வேண்டும்' என்றது சிட்டுக்குருவி.

இரண்டு குருவிகளும் சொல்வதிலுள்ள உண்மையை புளுனிக் குருவி புரிந்து கொண்டது. அத்தோடு தனது தவறையும் உணர்ந்தது. இனி தேவையானது போக மீதியை மட்டுமே சேமிக்க வேண்டும் என முடிவெடுத்தது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. "எனது தங்கையும் தம்பியும் எந்நேரமும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள்". இதற்குப் பொருத்தமான உவமை?
   1. கீரியும் பாம்பும் போல 2. நீர் மேல் எழுத்துப் போல
   3. நகமும் சதையும் போல

2. நான் எனது இனத்தை நீரிலே பெருக்குவேன். தரையிலும் வாழ்வேன் ஆனால் ஊர்ந்து செல்பவன் அல்ல. கரிய நிற முட்டையிடுவேன். மழைக்காலங்களில் அதிக ஒலி எழுப்புவேன். நான் யார்?
   1. பாம்பு 2. நுளம்பு 3. தவளை

3. பலா கன்று என்பது போல வாழை ______________
   1. பிள்ளை 2. குட்டி 3.வடலி

4. பிழையான வாக்கியத்தை தெரிக.
   1. பறவைகள் பறந்தன. 2. நாய் குரைத்தது.
   3. பூனைகள் கத்தியது.

5. பறவைகள் எல்லாம் பறக்கக் கூடியன. கிளி ஒரு பறவை ஆகவே
   1. கிளிகள் சில பறக்கும் 2. பறவைகள் எல்லாம் கிளிகள்
   3. எல்லா கிளிகளும் பறக்கக்கூடியன.

6. சில ஆண்கள் நல்லவர்கள் அல்ல. நிமால் ஒரு ஆண் ஆகவே,
   1. நிமால் நல்லவன் அல்ல 2. நிமால் கூடாதவன் அல்ல
   3. நிமால் பற்றி எதுவும் கூறமுடியாது.

7. வீட்டில் இருக்கும் உறவினர்களை வயதின் அடிப்படையில் சரியாகக் காட்டுவது எது?
   1. அப்பா, தாத்தா, நான் 2. அப்பா, நான், தம்பி
   3. தாத்தா, நான், அப்பா

8. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகப் பெரிய கோள் எது?
   1. புதன் 2. புவி 3. வியாழன்

9.  அருகில் உள்ள குறியீடு குறிப்பது?
   1. தொலைபேசி வைத்திருக்கத் தடை
   2. தொலைபேசி வாங்கத் தடை
   3. தொலைபேசி பாவிக்கத் தடை

10.  இக் குறியீடு குறிப்பது?
    1. முன்னால் பாதசாரிகள் கடவை
    2. பாதசாரி செல்லத் தடை
    3. முன்னால் பாதை வேலை

11. ஒரு வரிசையில் சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் ஆகிய கொடிகள் ஒழுங்குமுறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 22 வது கொடியின் நிறம் என்ன?
    1. சிவப்பு 2. மஞ்சள் 3. பச்சை

12. 5மீ நீளமான கம்பித்துண்டு ஒன்றிலிருந்து 1மீ 85செ.மீ துண்டொன்று வெட்டியெடுக்கப்பட்டு பின் 2மீ 60செ.மீ துண்டொன்று சேர்க்கப்பட்டது. எனின் தற்போது அக்கம்பித் துண்டின் நீளம் யாது?
    1. 5மீ 2. 55 செ.மீ 3. 5மீ 75 செ.மீ

13. ஒரு மீற்றர் துணியை வாங்குவதற்கு ரூ 40 தேவை. 3மீ 75 செ.மீ துணியை வாங்குவதற்கு எவ்வளவு தொகை தேவைப்படும்?
    1. ரூ 150 2. ரூ 120 3. ரூ 130

14. ஒரு ஆற்றில் நீர் மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் பாய்கின்றது. மனிதன் ஒருவன் மணிக்கு 12 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்று நீர் ஓட்டத்திற்கு எதிராக நீந்துகின்றான். இம்மனிதன் நீந்திச் செல்லும் உண்மையான வேகம் எவ்வளவு?
    1. 22 கிலோ மீற்றர் 2. 2 கிலோ மீற்றர்
    3. 12 கிலோ் மீற்றர்

15. கமல், விஜி, தரன், அச்சு ஆகியோர் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றினர். தரன், விஜியை விட மிக வேகமாக ஓடிய போதிலும் அச்சுவை விட பின்னாலேயே ஓடினான். எனினும் கமல், தரனை விட வேகமாகவும் அச்சுவிற்குப் பின்னாலும் ஓடினான். ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாகவும், இறுதியாகவும் வந்தவர்கள் முறையே
    1. விஜி, அச்சு 2. அச்சு, விஜி 3. தரன், கமல்

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் ஒரு ஒல்லாந்த பெண்ணின் காதல் கதை


18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி ! காலையில் சூரிய உதயத்தை ரசிக்கும் அவளுக்கு இன்று ரசிக்கும் மனநிலை இல்லை.பிற தேசம் என்றாலும் அவளுக்கு அவள் வாழ்நாளில் அதிக மகிழ்வை தந்தது இந்த திருகோணமலைதான்.இன்று அவளுக்கு பெரும் சோகத்தை கொடுத்து விட்டது.

தூரத்தே கப்பல் புறப்படுவதற்க்கான சங்கொலியும் ஒழித்தது.தன் கண்களை தனது அறையில் இருந்து கொண்டு கடலை நோக்கி கண்களை குவித்த அவளுக்கு பாய்மரம் விரிந்தது புரிந்த்தது. என்னதான் அந்த கப்பலில் இருக்கிறது அவளுக்கு...எதுவும் முக்கியமான பொருளாக இருக்குமோ......முக்கியமான பொருள்தான் அவள் காதல்!

ப்ரன்சினா வான் ரீட் ஒல்லாந்தில் பிறந்தவள் தந்தை அதிகாரி என்பாதால் அவள் ஒல்லாந்தில் வாழ்த்ததில்லை. இவள் பருவம் அடைந்த வயது தொடக்கம் எல்லாம் இந்த பிரேடிக் மலைக்கோட்டையும்,திருகோணமலை என்ற இந்த ஊரும்தான்.

ஜோசொப்பியன் அவன் கொட்டை ராணுவ அதிகாரி அவனை காதல் கொண்ட நாளில் இருந்து காதல் எனபதற்கு அர்த்தம் புரிந்தது. முதல் காதல் திகட்ட திகட்ட காதலித்தாள் அவனிடம் சொல்லாமலே.

அவனை அவள் காதலிப்பதை தனது தந்தையிடம் சொன்னாள்.அவளது தந்தையும் ஜோசொப்பிடம் பேசி திருமண திகதியும் குறிக்கபட்டது. ஆனாலும்



கப்பல் செல்ல தயார் ஆகி விட்டது காற்றில் அசைகிறது பாய்மரம்.மெல்ல மெல்ல கப்பலும் நகருகிறது.ரீட்டவுக்கு என்ன செய்வது தெரிய வில்லை.

தன் காதல் கனவு வாழ்க்கை அந்த கப்பலுடன் செல்வதாக உணர்வு.அறையை விட்டு வெளியே வருகிறாள். கோணேசர் மலைக்கு சாமந்தரமாக செல்லும் அந்த கப்பலுடன் தானும் மலையில் ஓட தொடங்குகிறாள்.கடலுடன் கலந்த அந்த மலைக்கு ஒரு முடிவு இருக்கும் என்று தெரியாமல் ஓடிய அவளுக்கு வாழ்வும் அந்த மலையுடன் முடிந்து விட்டது. இது ஒரு உண்மை சம்பவம் 1680 காலப்பகுதில் இடம் பெற்றது( கொஞ்சம் கற்பனை)



தந்தை பதவி மீது.அதற்காக சீதனமாக அந்த பதவியை கேட்க்க முயன்றான் கடைசில் அவனுக்கு இருந்த ராணுவ அதிகாரி பதவியும் போயிற்று. கொவமடைந்த ரீட்டாவின் தந்தை அவனுக்கு அவன் பதவியை நீக்கி ஒல்லாந்து செல்ல கட்டளை இட்டார்.

இந்த சம்பவங்கள் லேப்.கேணல் .தோமஸ்(பிரித்தானிய ராணுவம்) அவர்களால் 1940 ஆண்டு கண்டு எடுக்கபட்ட ஒல்லாந்த குறிப்புகள் அடிப்படியாக கொண்டது .
(அந்த ராணுவ அதிகாரி பெயர் தெரியவில்லை இதில் குறிப்பிட்டது கற்பனை பெயர்.)

**விடுப்பு:**

ராமு - கொடுமையிலும் கொடுமை எண்டு கோயிலுக்குப் போனா அங்கயும் ஒரு கொடுமை சரவணா.......
சோமு - என்ன?
ராமு - அடிதடி புடிஅடி கவிஞர் ஒருத்தர் இருக்கிறார் திருமலையில். அவரோட லொள்ளு....
சோமு - ஓம் ஏன் எங்கையாவது
அதோ பார் பஞ்சு
சட்டைக்குள்ள நெஞ்சு
முட்டையில இருக்கு குஞ்சு
முளிச்சிருக்கா அஞ்சு
எண்டு படிச்சிட்டாரோ?



ராமு - அட அதுவா இருந்தாலும் பரவாயில்லப்பா. ஈழத்தில் வெளிவந்த மிகப்பிரமாண்டமான 'மரணத்துள் வாழ்ந்தவர்களின்' கவிதைத் தொகுப்புக்கு தான் கவிதை எழுதினதாகவும் அதை வேரு ஒருவனிட்டக் குடுத்து அவண்ட பெயர்ல போட்டதாகவும் சொல்லிருக்கார்.
சோமு - அதோட சொல்லிருப்பாரே... அதுல இருந்துதான் அவன் கவிஞனானான் எண்டு?
ராமு - உனக்கும் தெரியுமா....... ஐயோ ராசா.... ஆள்விடு சாமியோவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாரம் அரபு மொழி பெயர்ப்பு கவிதைகள்

### குளிரான ஒருநாள்

குளிரான ஒரு நாள்
சூடேற்றியைப் போடவோ
மூன்றாவது சுவெற்றரை அணியவோ
யன்னலருகே நின்று
மழைக்காகக் காத்திருக்கவோ
நான் நினைக்கவேயில்லை
ஏனென்றால் இன்று மழை பெய்யாது
நாளை பெய்யும்
இந்த மணிப் பொழுதில்
எனக்கு என்ன வயதாகிவிட்டது என
நான் வினவவே மாட்டேன்
சில நேரங்களிற் சும்மா இருந்தபடி
இது குளிரான ஒரு நாள் என
நினைத்துக் கொள்வது போதுமானது.

### துணி உலர்த்துங் கயிறு

துணி உலர்த்துங் கயிற்றை
விட்டுச் சென்றனர்
ஒரு உடையையேனும்
அவர்கள் ஏன் மறந்து விட்டுச்
செல்லவில்லை

### வாடிப் போகுங் கனவுகள்

இந்த அறை ஒரு கிரகத்தை ஒத்தது
கட்டில் ஒரு தீவு என நான் சொல்வது
வெறும் மனக்கண் நோக்கு
இப்போது என் அழுகை
வெறும் மனக்கண் நோக்கு
வெறும் முட்டாள்த்தனமுங் கூட
எனினும் இவையெல்லாம்
பகலோடு
வாடிப்போகுங் கனவுகள்.

### மிக அழகான ஒரு மனிதன்

(என் தந்தைக்கு)
அவனை இவ்வாறு கண்டனர்
ஒரு உடம்பு அம்மணமாக மட்டும்
ஒரு பச்சைச் செடி
அவனது நிழலை நிலத்துடன்
பிணைத்துச் சொன்னது
அவன் கவனயீனமாகத்
தூங்காமலிருக்க
பின்பு அழுதது
அவனை இவ்வாறு நண்பகலிற்
கண்டனர்
மீன்களுக்கு அருகருகாக
மிக அழகான ஒரு மனிதன்

ஸமெர்.அபு - ஹவ்வஷ்
(பலஸ்தீனம்)

### கவிதை

(ஸாடி யூஸ்ஸெ.ஃ.ப்)
இந்தக் கண்ணாடிகளை உடைத்துக்
கிளைகளிடையே
சில்லுச் சில்லாக எறிந்தவர் யார்?
இப்போது....
ல், அக்.ஃ.டாரை வந்து பார்க்கச்
சொல்வோமா?
நிறங்கள் எல்லாம் குழம்பியுள்ளன,
படிமம் பொருளுடன் சிக்குப்பிடித்துப்
போயுள்ளது.
கண்கள் எரிகின்றன.
ல், அக்.ஃ.டார் இந்தக் கண்ணாடிகளைத்
தனது உள்ளங்கையில் எடுத்துத்
தான் விரும்பியபடி எவ்வாறும்
துண்டுகளை ஒன்றாகப் பொருத்திக்
கிளையின் நனைவை அழியாது பேண
வேண்டும்.

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### பாராளுமன்ற ஒழுக்காற்று விடயம் ஒன்றும் புதிதல்ல

பாராளுமன்றத்தில் நீதியரசர்களுக்கு எதிராகக் குற்றப்பிரேரணைகளைச் சமர்ப்பிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நீதியரசர்களுக்கு எதிராக மூன்று குற்றப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஐம்பத்தியேழுக்கும் மேற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னால் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு எதிரான குற்றப்பிரேரணையை சமாப்பித்திருந்த காலம் இருந்தது. பின்னர் பிரதம நீதியரசர்களான சரத் என் சில்வா மற்றும் நெவில் சமரக்கோன் ஆகியோருக்கு எதிராகவும் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளான பேர்சி கொலின் தோமே மற்றும் விமலரத்ன ஆகியோருக்கு எதிராகவும் இம் மூன்று குற்றப் பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### துரித பொருளாதார அபிவிருத்தியை குறிவைக்கும் பாதீடு

நவம்பர் மாதம் 08ம் திகதி முன்வைக்கப்படவுள்ள பாதீட்டில் 2013 தொடக்கம் 2015 வரைக்குமான இடைக்கால செலவீன திட்டமிடலின் அடிப்படையில் ஏற்கனவே தொடங்கப்பட்டு எதிர்காலத்தில் நிறைவுறவுள்ள முதலீட்டுத் திட்டங்களுக்கான செலவீன மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரச மூலங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. 8 வீத பொருளாதார அபிவிருத்தியை குறிவைத்திருக்கும் இப்பாதீடானது வருடாந்த பணவீக்க வீதத்தை 7வீத்திலும் குறைவாகப் பேணுமாறும் வடிவமைக்கப்பட்டுள்ளது. 67 பாதீடாக இப்பாதீடு அமையவுள்ளதுடன் சனனாயகச் சோகலிசக் குடியரசாகிய பின் சமர்ப்பிக்கப்படும் 35வது பாதீடாக அமையவுள்ளது. 6.8வீத மொத்தக் உள்நாட்டு உற்பத்தியிலுள்ள குறைவை 6.1 வீதமாக குறைக்கக் கங்கணம் கட்டியுள்ள இப் பாதீட்டில் வளர்ச்சி வீதம் 8 ஆக குறிக்கப்பட்டுள்ளது.

### தன்னியக்க பண இயந்திரங்களில் திருட்டு – வெளிநாட்டவர்

தன்னியக்க பண எந்திரங்களிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களை கிரமமாக தமது பண மீதியைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு காவல்தறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்தவாரம் சந்தேகத்திற்கிடமா நடமாடிய இரு வெளிநாட்டவர்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இரண்டு ரூமேனியா நாட்டைச் சேர்ந்த இளைஞர்களை தெகிவளை காவல்த் துறையினர் கைது செய்த போது அவர்களிடமிருந்து 57 மோசடியான தன்னியக்கப் பண எந்திர அட்டைகளும் 01 மாஸ்டர் அட்டையும், 2 விசா கடனட்டைகளும், வெயிநாட்டு வங்கியொன்றின் அட்டை உட்பட ரூபா 2,450,000 இலங்கைப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. உரிய விசாரணைகளை முடுக்கிய போது இப் பெருமளவு பணத்தொகைகளையும் அவர்கள் மவுண்ட்லவேனியா மற்றும் தெகிவளை பிரதேசங்களிலுள்ள தன்னியக்க பண எந்திரங்களிலிருந்தே அவர்கள் திருடியுள்ளது தெரியவந்துள்ளது.

### மின்னல் தொடர்பாக அவதானம் தேவை

கடந்த பல வாரங்களாக நீடித்த மழையால் 200 பேர் காயமடைந்தும் 15 பேர் கொல்லப்படவும் காரணங்களாகிய மின்னல், மண்சரிவு, நில நடுக்கம் தொடர்பாக அனர்த்த முகாமை நிறுவனம் கவனம் செலுத்தி வருகின்றது.

இடி மற்றும் மின்னலின் போது மக்களை வீட்டினுள் இருக்குமாறு இந் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன் இடி, மின்னலின் போது மின்சாதனப் பாவனைகளை அறவே கைவிடுமாறும் கணணி, கையடக்கத் தொலைபேசி, குளிரூட்டி, நீர்க் கொதிப்பி, நீர்ப்பம்பி, மின் அழுத்தி போன்றவற்றைப் பாவிக்க வேண்டாம் எனவும் கேட்டுள்ளது.

வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள்.
வர்ண விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்

## The Sunday Times:

### 13 + ஐ மீள வலியுறுத்தியது இந்தியா

பூகோளக் காலக்கிரம மீளாய்வில் இந்தியா 13வது திருத்தச் சட்டத்தினை அமுலாக்குவதுடன் அதற்கும் மேல் ஒரு படிநிலைக்குச் சென்று தமிழர் அவலத்திற்குத் தீர்வு காண அரசு முயலவேண்டும் என வலியுறுத்தியுள்ளது. பூகோளக் காலக்கிரம மீளாய்வில் இலங்கையின் மீதான பார்வைக்காக வழங்கப்பட்ட தனது நேரத்திலேயே இதனை இந்தியா வலியுறுத்தியுள்ளது. 13ம் திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனியின் அங்கத்துவக் கட்சிகளில் ஆகக் குறைந்தது மூன்று கட்சிகளாவது குரல்களை எழுப்பியுள்ளன. இக்குரல்களுக்கான மக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதற்கு கூட்டங்களை அவர்கள் நடத்தும் இவ்வேளை இந்தியா இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளது. 13ம் திருத்தத்திற்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கியுள்ள கட்சிகளாக ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முண்ணனி, மகாஜன எக்ஸத் பெரமுன என்பவை ஆகும்.

### கூடங்குளம் – தமிழ்நாட்டில் பெரும் ஆர்ப்பாட்டம், இலங்கை கடும் அமைதி

பல்லாயிரக் கணக்கான தமிழ்நாட்டின் மக்கள் தெருக்களில் இறங்கி கடும் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தத் தொடங்கியுள்ள இவ்வேளையில் கூடங்குளம் அணுமின்நிலையம் தொடர்பாக இலங்கை மிக அமைதி காக்கின்றது. இலங்கை வெளிவிவகார அமைச்சின் அலுவலர் சரத் திசநாயக்காவின் கூற்றுப்படி " இவ் அணுமின்நிலையம் தொடர்பாக நாங்கள் முன்னெடுத்த இராசதந்திர நகர்வுகளின் பெறுபேறானது திருப்திகரமாக இருப்பதால் தெருவில் இறங்கிப் போராட வேண்டிய தேவை எதுவம் எமக்கில்லை" எனத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் கடந்த மாதமளவில் கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக டெல்லியில் நிகழ்ந்த இராசதந்திரப் பேச்சுக்களின் போது இந்தியா ஏதாவது அனர்த்தம் இவ்வணுவுலையால் நிகழுமாயின் அதன் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருத்தமான அனைத்துச் சாத்திய நடவடிக்கைகளையும் இலங்கைக்கு வழங்கத் தயாராயிருப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### சம்பள உயர்வில்லை – கடும்காலத்தை எதிர்கொள்ள நேரிடும்

வியாழன் வெளிவரவுள்ள பாதீட்டில் சம்பள உயர்ச்சிகள் இல்லை எனினும் உர மானியமும், சமுர்த்தி நன்மைகளும் அவ்வாறே பேணப்படவுள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். " பாதீட்டைத் தயாரிக்கும் போது அரசு ஈரானிலிருந்து பெற்றோலிய இறக்குமதித் தடையாலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட வரட்சியாலும் பெரும் சவால்களை எதிர்கொண்டது'' என அவர் இப் பத்திரிகைக்கு செவ்வியுள்ளார். அரச திறைசேரியானது கடினங்களை எதிர்கொள்வதை ஏற்றுக்கொண்ட அவர் அடுத்த வருட ஆரம்பம் முதல் அடுத்த மூன்றாண்டுத் திட்டமாக இறக்குமதிகளைக் குறைப்பதை அமுலாக்கப் போவதாக தெரிவித்தார். 38 பில்லியன் ரூபாய்களை அரச ஊழியர் கொடுப்பனவுகளாக கொண்டுள்ள நிலையில் மேலும் சம்பள உயர்ச்சி என்பது சாத்தியமில்லை என நிதியமைச்சின் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் நாளாந்தச் செலவினங்களுக்காக முதலீட்டுச் செலவீனங்களை பலியிட அரசு தயாரில்லை எனும் செய்தியும் வெளியாகியுள்ளது.

### ஹெட்ஜிங் – ஸ்டான்டர்ட் சார்டட் வங்கியுடன் அரசு சமரச முயற்சி

ஐக்கிய இராச்சிய நீதிமன்றினால் திர்க்கப்பட்டதன் படி இலங்கை ஸ்டான்டட் சார்டட் வங்கிக்குச் செலுத்த வேண்டிய 180 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (23 பில்லியன் ரூபாய்கள்) தொடர்பாக அரசு அவ்வங்கியுடன் சமரச முயற்சிகளைத் தொடர முனைந்துள்ளது. தீர்க்கப்பட்ட தொகையினை விடக் குறைந்தவோர் தொகையைச் செலுத்துவதன் ஊடாக தம்மிடையே கணக்கைத் தீர்த்துக்கொள்ளும் முயற்சியாகவே இவ் விடயம் உள்ளது. அன்ரோனி ஜெனரலின் கூற்றுப்படி 60 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்தி கணக்கைத் தீர்த்துக்கொள்ளும் சமரசப் பேச்சுக்களில் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் இறங்கியுள்ளது தெரியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Sunday Leader

### காலக்கிரம ஆய்வில் இலங்கை வாக்குறுதி

இலங்கை கருத்தாழம் மிக்க தீர்வொன்றை எப்படியும் எட்டப் போவதாக பூகோளக் காலக்கிரம மீளாய்வில் வாக்குறுதியளித்துள்ளது. ஆனால் இந்தியத் தரப்பானது 2008ம் ஆண்டில் இலங்கை சர்வதேசச் சமூகத்திற்கு வழங்கிய உறுதிமொழியின் படியும் அதன் பின்னர் இணங்கியவாறு 13ம் திருத்தத்தினை அமுலாக்குவதன் ஊடாகவும் ஏற்கத் தக்க தீர்வு நோக்கி நகர வேண்டும் என்று வேண்டியுள்ளது.

### கொழும்பு மோசடிப் பணியக புலனாய்வுப் பிரிவு மூடப்பட்டது.

கொழும்பு மோசடிப் பணியகத்தின் புலனாய்வுப் பிரிவானது மூடப்பட்டதுடன் அதன் அலுவலர்கள் இடமாற்றமும் செய்யப்பட்டு விட்டனர். இப் பிரவின் உதவிக் காவல்துறைப் பரிசோதகர் ஒருவர் இலஞ்சம் பெற்றுக் கொண்டமை தொடர்பாகக் கைதாகியதைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரிவில் இணைக்கப்பட்டிருந்த ஆறு அலுவலர்களில் ஏற்கனவே இதே குற்றச்சாட்டின் பேரில் கைதாகியிருந்தனர்.

### முப்படையும் தயார்

அனர்த்த முகாமை அமைச்சின் குறிப்பின் படி முப்படைகளும் காவல்துறையும் வெள்ள நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்நேரமும் விழிப்புடன் இருப்பதாகத் தெரியவருகின்றது. எவராவது உதவிகோரும் போது உடனடியாகத் தளத்திற்கு விரைந்து உதவிகளை இவர்கள் வழங்குவர் எனவும் தெரிய வருகின்றது. கடந்த கால மழை மற்றும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்தே இவர்கள் விழிப்புடனிருக்கப் பணிக்கப்பட்டுள்ளனர் என மேலும் அக் குறிப்பு தெரிவிகக்கின்றது.

சூறாவளிச் சூழ்நிலையை எதிர்கொள்ள சுமார் 200 மில்லியன் ரூகாய்களை அரசு ஒதுக்கியுள்ளது என அமைச்சு தெரிவிக்கின்றது. மேலும் சூறாவளிச் சூழ்நிலையை எதிர்கொள்ள நீர்வழங்கல், நீர்ப்பாசன, பெருந்தெரு, விவசாய, பாதுகாப்பு அமைச்சுக்களும் விழிப்புணர்வுக்குட்பட்டுள்ளன.

### பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணை – அமெரிக்க இராசாங்கத் திணைக்களம் கரிசனை

அமெரிக்க இராசாங்கத் திணைக்களம் இலங்கையின் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான பாராளுமன்றக் குற்றப் பிரேரணை தொடர்பாக கரிசனையுடன் அவதானிப்பதாக வெளிப்படுத்தியுள்ளது. அத் திணைக்களத்தின் பேச்சாளரை அடிப்படையாகக் கொண்டு இச் செய்தி வந்துள்ளது. மேலும் அமெரிக்கா இலங்கையின் நீதித்துறைமீது தற்போது எழுந்துள்ள ஆபத்துக்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி வருகின்றமை தெரிய வந்துள்ளது.

### ஐக்கிய தேசியக் கட்சி குழுவை அமைக்கின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு எழுப்பியுள்ள குற்றச் சாட்டுகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு ஐ.தே.க. குழுவொன்றை நியமித்துள்ளது. இக் குற்றச்சாட்டு தொடர்பான அடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தீர்மானிக்கும் தகவல்களை இக் குழுவே தரப் போவதாக ஜோன் அமரத்துங்க தெரிவித்தார். இவ்வாறே பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிப்பது தொடர்பாகவும் கட்சி பாராளுமன்றில் கோரிகையை மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஏலவே காமன்வெல்த் நீதிபதிகள் அமைப்புடனும், சர்வதேசச் சட்டத்தரணிகள் அமைப்புடனும், இலங்கைச் சட்டத்தரணிகள் அமைப்புடனும் இலங்கை நீதிபதிகள் அமைப்புடனும் நீதிபதிகள் அமைப்புடனு பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்துள்ளதாக அவர் மேலும் கோடிட்டார்.

### தனியார் பேரூந்து தொடர்பான சட்டவாக்கம் நிராகரிக்கப்பட்டது.

தனியார் பேரூந்து இயக்குனர்கள் மற்றும் அதன் சாரதிகளைக் கையாளும் இறுக்கமான சட்டவாக்கத்திற்கா முயற்சிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை என தனியார் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

## கோடிக்கணக்கான.

இதனைத் தொடர்ந்து "செலிங்கோ பில்டிங் சொசைட்டி (தனியார்) கம்பனி" யின் திருமலை முதலீட்டாளர்களுக்கு 3 வருட மீள் வழங்கும் திட்டமென ஒரு திட்டத்தைத் தொடங்கிய இக்கம்பனி அவ் வருடத்திலிருந்து அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு 9 வீத வட்டியைச் செலுத்துவதாகவும் அதன் பின் முதலைத் திருப்பி வழங்கும் உறுதியையும் செய்திருந்தது.

2011ம் ஆண்டில் இக் கம்பனியின் பெயர் "லங்கா பில்டிங் சொசைட்டி (தனியார்) கம்பனி" என மாற்றப்பட்டுள்ளது. அம் மாற்றத்தின் போது முதலீட்டாளர்கள் பல குழப்பமான தகவல்களைப் பெற்றுக் கொண்டிருந்ததாக தெரிவித்தனர். இப் புதிய கம்பனியை " மேச்சன்ட லங்கா" எனும் கம்பனி கையேற்றதாக முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. பின் மற்றோர் புதிய கம்பனி ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் (நியூவெச்ட் கப்பிட்டல் கம்பனி- Newst Capital) அக்கம்பனி குத்தகைக்கு விடுதல், அடைவுபிடித்தல் போன்ற வங்கி நடவடிக்கைகளை நிகழத்தவுள்ளதாகவும் அனைத்து "லங்கா பில்டிங் சொசைட்டி (தனியார்) கம்பனி" யின் முதலீட்டாளர்களும் அக்கம்பனியில் 50 வீதமான பங்குகளைக் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. முதலிட்ட தொகையை எவ்வாறேனும் மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் புதிய கம்பனியின் பங்குதாரர்களாகவும் பெருமளவு முதலீட்டாளர்கள் மாறியுள்ளனர்.

இவ்வருடத்தின் மார்கழி மாதத்துடன் முன்னர் அறிவிக்கப்பட்ட மூன்றாண்டுத் திட்டமானது முடிவுக்கு வருகின்றது. எனவே தை 2013 முதல் முதலைத் திருப்பி வழங்க வேண்டிய தேவை இக் கம்பனிக்கு எழுந்துள்ளது.

இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நீயூவெஸ்ட் கம்பனியை மத்திய வங்கி அனுமதிக்கவில்லை என்றும் அதனால் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் திருமலையின் முதலீட்டாளர்களுக்கு வாய்மொழி அறிவிப்பை திருமலை அலுவலக முகாமையாளர் விடுத்துள்ளார். அத்துடன் புதிய திட்டமொன்றையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அத்திட்டத்தின்படி கடந்த மூன்று வருடங்களாக முதலீட்டிற்கு வழங்கிய 9 வீத வட்டியை முதலிலிருந்து கழிக்க வேண்டும் என்றும் மேலும் ஒரு வருடத்திற்கு 9 வீதப்படி வழங்கப்படும் தொகையை முதலிலிருந்து கழ்க்க வேண்டும் என்றும் அதன் படி அடுத்த 2014ன் ஆரம்பத்தில் முதலீட்டின் 36 வீதம் கழக்கப்பட்டிருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

எஞ்சிய தொகையின் 45 வீதத்தை அடுத்துவரும் 5 தொடக்கம் 10 ஆண்டுகளுக்குள் மீளத் தருவதாகவும், எஞ்சியுள்ள 19 வீதத்தில் 10வீதத்தைப் புதிய கம்பனியொன்றின் பங்குகளாகத் தருவதாகவும் கடைசியாகவுள்ள 9 வீதத்தைத் தரமுடியாது எனவும் திருமலைக் கிளையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வறிவிப்பை 02.11.2012ல் பெற்றுக் கொண்ட முதலீட்டாளர்கள் இவ்விடயத்தை திருமலையின் பிரதான காவல்த்துறைப் பணியகத்தில் முறையிட முடிவு செய்துள்ளனர்.

பிரதான காவல்த்துறை அலுவலகமானது இவ் விடயத்தை காவல்த்துறை அத்தியட்சகருக்கு அறியத் தருமாறு கோரியுள்ளது. இதனைத் தொடர்ந்து 04.11.2012ல் முறையீட்டைப் பெற்றுக் கொண்ட காவல்த்துறை அத்தியட்சகர் அலுவலகம் மறுநாள் மாலை 4 மணியளவில் நிதிக் கம்பனியின் முகாமையாளரையும் அழைத்து விசாரணையை மேற்கொண்டுள்ளது. அதன் போது விடுக்கப்பட்ட செய்திகள் யாவும் வாய்மொழியின் ஊடாக இருப்பதால் அடுத்துவரும் ஒரு வாரத்திற்குள் முதலீட்டாளர்களுக்கான எழுத்து மூல அறிவிப்பைச் செய்யுமாறு கடுமையான உத்தரவொன்று நிதிக்கம்பனி முகாமையாளருக்கு விடுக்கப்பட்டுள்ளதாக முதலீட்டாளர்கள் தெரிவித்தனர். 12ம் திகதிக்கு முன் இவ் எழுத்து மூல அறிவிப்பு முதலீட்டாளர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றும் அவ்வாறு கிடைத்தாலென்ன கிடைக்காவிட்டாலென்ன அனைவரையும் 14ம் திகதி மாலை 04.00 மணிக்கு காவல்த்துறை அத்தியட்சகர் அலுவலகத்திற்கு வருகை தருமாறும் காவல்த்துறை அத்தியட்சகர் அலுவலகத்தினரால் மதலீட்டாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இக்கம்பனி ஆரம்பிக்கப்பட்ட போது சுமார் 23வீத ஆண்டு வட்டியை வழங்குவதாகக் கவர்ச்சிகரமாக அறிவித்திருந்தது. பின்னர் அவ் வட்டிவீதம் 19ஆகக் குறைக்கப்பட்டு தற்போது வழங்கப்படும் 9 வீத வட்டியையும் முதலிலிருந்தே கழிக்க முற்படுவதால் முதலீட்டாளர்கள் வயிரெரிந்த நிலையிலுள்ளனர்.

மேலும் தனிநபர்களைத் தவிர திருக்கோணமலையின் முண்ணனி உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமொன்றும் வேறு சில தனியார் நிறுவனங்களும் இக் கம்பனியில் முதலிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் வெளிநாட்டிலிருந்தும் பலர் முதலிட் டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தற்பொது தெரியவந்துள்ள மதிப்பீட்டின்படி சுமார் ஆறு கோடி ரூபா முதலீடு இறுகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அனைத்து முதலீட்டாளர்களும் ஒன்றுபடும் போதோ அல்லது காவல்துறை நடவடிக்கையின் போதோ தான் உண்மைத் தொகை உலகின் வெளிச்சத்துக்கு வரும் எனத் தெரிகின்றது.

ஒரு வருடத்திற்கு முன் சுமார் 1,200,000 ரூபாத் தொகையை முதலிட்ட ஒருவர் முதலீட்டைத் திருப்ப முயன்ற போது கம்பனி செலுத்த முடியாது என அறிவித்ததாகவும் அக்கணமே அவர் காவல்த்துறை அத்தியட்சகருக்கு விடயத்தைத் தெரியப்படுத்திய போது அவரது முயற்சியால் அரைவாசி முதலீட்டை மீளப் பெற்றுக்கொண்டதாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. த பினான்ஸ் கம்பனிக்கு அருகில் இக் கம்பனியிருப்பதால் பொது மக்களிற் சிலர் தவறாக த பினாஸ் கம்பனியே இவ்வாறான வங்குரோத்தடைந்ததாக கருதியிருந்தனர். எனினும் அச் செய்தி தவறானது என்றும் இவ் வங்குரோத்துக்கும் த பினாஸ் கம்பனிக்கும் எவ்வித தொடர்புகளுமில்லை என்பதும் தற்போது தெளிவாகியுள்ளது.

## காசு மோசடியால் கழுத்தை அறுத்தார்

காசு மோசடிக் குற்றச்சாட்டால் தனது கழுத்தைத் தானே தொடரூந்தில் கொடுத்துத் துண்டாக்கிக் கொண்டார் அரச அலுவலர் ஒருவர்.

சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்கவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். 06ம் திகதி இரவு இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சுமார் 150,000 ரூபாவிற்கும் மேல் காசை மோசடி செய்ததாக தெரியவருகின்றது. அனுராதபுரம் சந்திக்கு அருகில் கடும் மது போதையில் இம் முடிவை அவர் தெடிக் கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாண திட்டமிடல் அமைச்சில் பணியாற்றும் அலவலரான இவருக்கு இரண்டு பராயமடைந்த குழந்தைகள் இருப்பதாக தெரிகின்றது.

**உங்கள் பிரதேச செய்திகளை உடனுக்குடன் மலைமுரசுக்கு தெரிவியுங்கள**
malaimurasu@hotmail.com
075 42 52 042

## ஏமாற்றும்...

எனும் தொலைத்தொடர்பாடல் சேவை முறையினூடாகப் (Call forwarding service) பெருமளவு இணைப்புக்களை உருவாக்கி வாடகைக்கு விட்டுப் பணத்தைத் தனது வெளிநாட்டு வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிடச் செய்துள்ளதாகவும் அதன் உண்மைச் செலவை வாடகைக்கு வீட்டைக் கொடுத்தவரே செலுத்த வேண்டியுள்ளதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டவர்கள் உல்லாசக் களிப்பிற்காக இலங்கைக்கு வரத் தொடங்கியவுடன் வெந்நிறத் தோல் போர்த்த குற்றவாளிகளும் உல்லாசப் பயணிகளாக வரத் தொடங்கிவிட்டனர் என ஆதங்கப்பட்டுக்கொண்டனர் முதியவர்கள் சிலர்.

## தவறு நிரூபிக்கப்...

எந்த முறுகல் நிலையும் ஏற்பட வில்லை எனவும், இவ்வாறன பிரச்சனைகள் எல்லாப் பல்கலைகழகங்களிலும் வழமையாக ஏற்படும் பிரச்சனைதான் என்றும் கூறினார். அது மட்டும் அல்லாது இதில் எந்த அரசியல் பின்னணி இல்லை எனவும் தெரிவித்தார். மேலும் முறுகல் நிலைதொடர்பான விசாரணைகளின் பின்னர் குற்றம் நீரூபிக்கப்பட்டால் அம்மாணவர்களுக்கு எதிராகத் தயவு தாட்சண்யமின்றிய நடவடிக்கையைத் தான் மேற்கொள்வேன் எனவும் தெளிவு படுத்தினார். மேலும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் இந்த முறுகல் நிலைக்கு மூன்று சம்பவங்கள் காரணம் எனவும் முதல் சம்பவம் அக்டோபர் 17ம் திகதி இரவு விடுதி மாணவர் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் ஆரம்பமாகியதாகவும் அவர் தெரிவித்தார். அம்மாணவர் தாக்கப்பட்டதாக தனக்கு மறுநாட் காலையிலேயே தெரிய வந்ததாகவும் தாக்கப்பட்ட மாணவர் நிர்வாகத்திடம் அனுமதி பெறாமலேயே வைத்தியசாலையிலிருந்து தனது வீட்டிற்கு சென்று விட்டதாகவும் தெரிவித்தார். ஆனாலும் விடுதியில் இருந்த மாணவர்கள் மற்றும் காவலாளியிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டாவது சம்பவம் நவம்பர் 5 திகதி இரவு நிகழ்ந்துள்ளது. அன்றைய தினம் இரவு வளாக முதல்வருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய விடுதி மாணவர்கள் சிலர் அவ்விடுதியில் தாமிருப்பது தமக்குப் பயத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்தவுடன் அர்த்தராத்திரியிலேயே தான் அவ்விடுதிக்குச் சென்று தமிழ் மாணவர்கள் சிலரை வேறு விடுதிக்கு மாற்றியதாகவும் அக் கணத்தில் அங்கு பயத்தை விளைவித்த ஆறு மாணவர்களுக்கு வகுப்புத் தடையை மறுநாள் விதித்ததாகவும் கூறினார்.

மூன்றாவது சம்பவமாக தொலைக்காட்சியொன்றை அனுமதியின்றிக் களற்றிச் சென்றதனால் எழுந்த பிரச்சனையை நிர்வாகம் உடனடியாக தீர்த்து விட்டதாகவும் அவர் கூறினார்.

இப்பிரச்ச்னைகளுக்கான வாளாக நிர்வாகத்தின் அடுத்த நடவடிக்கை என்ன என்ற செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்த முதல்வர் முதல் கட்டமாக பிரச்சனைக்குரிய மாணவர்கள் மற்றும் அன்றைய காவல் பணியில் ஈடுபட்டிருந்த காவலாளிகளிடமும் பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்பட்ட வெள்வாரி விசாரணை குழு 08.11.2012 காலை 9.30 விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பிரச்சனைக்குரியவர்கள் என இனம் காணப்படும் மாணவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப் படுவார்கள் என கூறினார்.

## கடலில் வீசப் . . .

சட்டவிரோதப் பயணத்தில் இவருடன் சுமார் 60 பேர் பயணித்ததாகவும் அவர்கள் வழிதவறிய நிலையில் இந்தோனேசியக் கடற் பரப்புக்குள் சில நாட்களுக்கு முன்னர் நுழைந்ததாகவும் அவர்களை கைது செய்த இந்தோனேசியக் காவல்துறை நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே அவ் உறவினர் இத் தகவலை வீட்டிற்குத் தெரிவித்து உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## "குறிஇடல்" கவிதைப் புத்தக ..........

இந் நிகழ்வினை கு. சுரேஸ் ஓழுங்கமைக்க தொடக்கவுரையை திரு. தர்மபவன் நிகழ்த்தவுள்ளார். அதைத் தொடர்ந்து பெரிய ஐங்கரன் அவர்களின் நிகழ்வுரையும், மாயன் அவர்களின் நயப்புரையும் நிகழவுள்ளன. தொடர்ந்து ஏற்புரையையும் நன்றியுரையையும் பவித்ரன் நிகழ்த்தவுள்ளார்.

பவித்ரன் அவர்களின் முதலாவது புத்தகமான ரசனாதம் 2010ல் வெளியாகியிருந்தது. திருமலையில் மிகவயது குறைந்த புத்தகவெளியீட்டாளனாக பவித்ரன் இம் முதலாவது புத்தகத்தின் ஊடாக சமூகமயப் படுத்தப்பட்டிருந்தார். பிரபல்யமான நிகழ்சித் தொகுப்பாளரான இவர் திருமலையில் பல நிகழ்சிகளை தொகுத்தளித்துள்ளார்.

இளங்கோ கழகத்தின் திருமலைச் செயலாளராகச் செயற்படும் இவர் கலை, கலாசார அபிவிருத்தி அமையத்தின் அங்கத்தவராகவும், பகிர்வுகள் அமைப்பின் பிரதானிகளில் ஒருவராகவும் உள்ளார்.





இந்த முறுகல் நிலை தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கிழக்கு பல்கலைகழக, திருமலை வளாக சித்த மருத்துவ மாணவர் மன்றம் கடந்த 02.11.2012 திகதி அன்று இணையத்தளங்களில் "தமிழ் மாணவர்கள் மீது சிங்கள மாணவர்கள் தாக்குதல்- திருமலை வளாகத்தில்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட செய்தியில் சித்த மருத்துவ துறை மாணவர்கள் சம்பந்தமான தகவல்கள் உண்மையானவை அல்ல எனவும் அவ் இணையதளத்தில் கூறப்பட்டது போன்று சித்த மருத்துவ மாணவர்கள் புத்தரின் உருவ படத்திற்கு எந்த தீங்கும் இளைக்கவில்லை எனவும் அது மட்டும் அல்லாது இந்த சம்பவத்திற்கு தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் அறிக்கையையும் முதல்வர் நிருபர்களிடம் கையளித்தார்.

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 11. 11. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org